Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

ரிரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
உள்நாடு வெளிநாடுகளுக்கான சகல வீதமான
துரித தபால் / பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303, K.K.S ROAD, JAFFNA T.P- 021-222 2670,
FAX-222 3214, email-del-smskr@eureka.lk

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ரம்ழான் 08 (03.11.2003) திங்கட்கிழமை இதழ் :34



தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் நடந்த அமைதிப் பிரார்த்தனையில் ஆனந்தசங்கரி உரையாற்றுவதை முதற்படத்திலும், ரவிராஜ் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், ஆனந்தசங்கரியின் உரையால் குழப்பநிலை தோன்றியதை அடுத்து ஆதரவாளர்கள் வெளியேறுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## யாழ். அலுவலகத்தில் நேற்று நடந்த அமைதிப் பிரார்த்தனையில்

# நம்பிக்கைத் தீர்மானம் கொண்டுவரும் முயற்சியில்

# கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரிக்கு தோல்வி!

## கூச்சல் குழப்பத்தில் முடிந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தி நடத்தப்பட்ட பிரார்த்தனை நிகழ்வில், கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி தன்மீது நம்பிக்கைத் தீர்மானத்தினைக் கொண்டுவரமுற்பட்டதால் - இந்த நிகழ்வில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.**

**இதனால், ஆனந்தசங்கரி உரையாற்றிக்கொண்டிருந்தபோது, கட்சியின் ஆதரவாளர்கள் பிரார்த்தனை மண்டபத்தைவிட்டு வெளியேறினர்.**

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைக்குள் அண்மைக்காலமாக ஏற்பட்டுவரும் சிக்கல்கள், குழப்பங்களையடுத்து - நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் அமைதிப் பிரார்த்தனை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

இந்நிகழ்வு நேற்றுக்காலை யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள அலுவலகத்தில் காலை 9.30 மணிக்கு கூட்டணியின் மூத்த உறுப்பினர் முத்துலிங்கம் தலைமையில் ஆரம்பமாகியது.

தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் பிரார்த்தனை ஆரம்பமாகியது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தலைமைப் பதவியிலிருந்து ஆனந்தசங்கரி விலகவேண்டும்!

### அம்பாறை மாவட்டக்கிளை தீர்மானம்

(அம்பாறை)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைப் பதவியிலிருந்து ஆனந்த சங்கரியை விலகக்கோரி, அம்பாறை மாவட்ட தமிழர் விடுதலைக்கூட்டணியின் கட்சி உறுப்பினர்கள் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளனர்.

நேற்று அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு கலாசார மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு தலைமையில் இடம்பெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்களுக்கான கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தில் - தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணியை உருவாக்கியவன் நான்; அதிலிருந்து என்னை நீக்க முடியாது!

### ஆனந்தசங்கரி பி.பி.ஸிக்கு தெரிவிப்பு

(கொழும்பு)

நான் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவனல்ல, அதனை உருவாக்கியவன். என்னைக் கட்சியிலிருந்து விலகுமாறு கூறும் அதிகாரம் யாருக்கும் கிடையாது.

இவ்வாறு - தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸியின் தமிழோசைக்கு அவர் அளித்த செவ்வியொன்றிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்ததாவது,

எனது பதவிக்கு மட்டுமல்ல, கட்சிக்கே ஆபத்து வந்துவிட்டது. இதனைப் பலர் இன்னமும் உணரவில்லை. சிலரது அழுத்தத்தாலேயே என்னைப் பதவி விலகுமாறு கூறி வருகின்றனர்.

எனது கட்சியைச் சேர்ந்த அரைவாசிக்கும் அதிகமானோர் என்னைப் பதவி விலகுமாறு கோருவார்களாக இருந்தால், நான் பதவி துறப்பேன்.

ஆனால், பலரும் தமது ஆதரவை எனக்குத் தெரிவிப்பதோடு என்னைத் தொடர்ந்தும் கட்சியில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் சமர்ப்பித்துள்ள யோசனை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது!

### சம்பந்தன் எம்.பி கருத்து

(திருகோணமலை)

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக யோசனை சரித்திர முக்கியத்துவம்வாய்ந்தவையாக உள்ளது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டம் குறித்து தகவல் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கோரிக்கைகளை எழுத்து மூலமாக முன்வைத்திருப்பது (10 ஆம் பக்கம் பார்க்க)

### ஆயிரத்துஐந்நூறுக்கும் மேற்பட்ட

## மாணவர்கள் பங்குபற்றிய புலமைப்பரிசில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

'நமது ஈழநாடு' நடத்திய தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடிக்கருத்தரங்கு நேற்று யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு ஆரம்பமான இந்தக் கருத்தரங்கு மாலை 3 மணிக்கு நிறைவுபெற்றது. இந்தக் கருத்தரங்கில் சுமார் 1500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

மேல்மாகாண ஆசிரிய ஆலோசகர் த.அம்பிகைபாகனால் நடத்தப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியார்



சங்கரியாற்றை சங்கதியாலை சந்தி சிரிக்குது...

## விடுதலைப் புலிகளின் திட்ட வரைபை எதிர்க்கட்சிகள் இணைந்து எதிர்க்கும்!

### ஜனாதிபதி மாளிகையில் நேற்றிரவு முடிவு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுப்பதென, ஜனாதிபதி மாளிகையில் நேற்றிரவு நடந்த அவசர கூட்டத்தில் திர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகாவின் அழைப்பின்பேரில் நேற்றிரவு நடந்த இந்தக் கூட்டத்தில் ஜே.வி.பி., மக்கள் ஐக்கிய முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் பங்குபற்றினார்கள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1753)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# நமது ஈழநாடு நேற்று நடத்திய புலமைப் பரிசில் கருத்தரங்கு - சில காட்சிகள்



மங்கள விளக்கினை ஏற்றும் அனுசரணையாளர்கள்



பரீட்சையில் பங்குகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினர்



ஆசியுரை வழங்கியவர்கள்



கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவர்களும் ஆசிரியர்களும்

## அரியாலையில் தற்காலிக குடிசைகள்

அரியாலை முள்ளிப் பிரதேசத்தில் தற்காலிக குடிசைகள் அமைத்து மீளக்குடியமர தெரிவு செய்யப்பட்டவர்கள், மூன்று நாட்களுக்குள் அதற்கான விண்ணப்பங்களை யா/96 கிராம அலுவலர் தேவராஜாவுடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பகுதியில் குடியிருப்பை அமைப்பதில் ஏதாவது பிரச்சனைகள் இருப்பவர்கள், அதனையும் கிராம அலுவலரிடம் தெரிவிக்கும்படியும், முள்ளிப் பகுதியில் காணியற்றவர்களுக்கு தற்காலிக குடியிருப்பு வசதிகளை அமைப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும் எனவும் நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்தார்.


நிரஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்

விஜய், பூமிகா நடித்த பத்ரி

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

X X X

(சி-1752)

ராஜா யாழ்ப்பாணம்.

பிதாமகன்

காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30 (பு.நே)

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1751)


## தமிழீழ மீட்புநிதி மீளப்பெறாதோர் கவனத்திற்கு

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புக்காகத் தெரிவுசெய்யப்பட்டவர்களில் இதுவரை மீளப்பெறாதோர் பின்வரும் இடங்களில் தமக்கு வசதியான ஏதாவதோரிடத்தில் மீளப்பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**21.11.2003 (வெள்ளி)**

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ சுப்பிரமணிய மகா வித்தியாலயம் | - புதுக்குடியிருப்பு | பி.ப. 03.00 மணி | - | பி.ப. 03.30 மணி |

**22.11.2003 (சனி)**

| | | | | |
|---|---|---|---|---|
| வருவாய்ப்பகுதிச் செயலகம் | - புளியங்குளம் | காலை 08.00 மணி | - | காலை 09.00 மணி |
| விடத்தல் தீவு றோ.க. பாடசாலை | - விடத்தல் தீவு | பகல் 12.30 மணி | - | பகல் 12.45 மணி |
| கருங்கண்டல் றோ.க. பாடசாலை | - கறுக்காய்க்குளம் | பி.ப. 02.00 மணி | - | பி.ப. 02.30 மணி |
| மல்லாவி மத்திய கல்லூரி | - மல்லாவி | பி.ப. 04.30 மணி | - | பி.ப. 05.00 மணி |

**23.11.2003 (ஞாயிறு)**

| | | | | |
|---|---|---|---|---|
| வேம்பொடுகேணி அ.த.க. பாடசாலை | - பளை | காலை 08.00 மணி | - | பகல் 11.00 மணி |
| கிளி. மத்திய கல்லூரி | - கிளிநொச்சி | பி.ப. 03.00 மணி | - | பி.ப. 03.30 மணி |

குறிப்பு : பளை. புளியங்குளம் ஆகிய இடங்களுக்கு வருபவர்களுக்கு நுழைவாயிலருகே ஊர்தி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதிக்குக் கீழ்வரும் பணிநிலைக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து வேண்டுகை கோரப்படுகின்றது. ஆர்வமுடையோர் தங்களது தன்வரலாறு அடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 10.11.2003 ஆம் நாளுக்கு முன்னதாக, எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

**ஆய அலுவலர் (ஆண்கள் மட்டும்)**

**கல்வித் தகைமை:-** க.பொ.த (உ/த) அல்லது க.பொ.த (சா/த) உடன், ஈராண்டிற்குக் குறையாத துறைசார் பட்டறிவு.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-** பொறுப்பாளர், மனிதவள மேம்பாட்டுப்பகுதி, வருவாய்ப்பகுதிச் செயலகம், கிளிநொச்சி.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்:-** 11.11.2003. காலை 10.00 மணி.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:-** வருவாய்ப்பகுதிச் செயலகம், யாழ்சாலை, கிளிநொச்சி.

**குறிப்பு:** நேர்முகத்தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத்தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

(சி/1758)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

# பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட எமது மக்கள்

# சொந்த நிலங்களில் மீளக்குடியமர்த்தப்படவேண்டும்!

## அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பேட்டி

**கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் - அரசியற்துறைப் பொறுபபாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அவற்றுக்கு அவர் அளித்த பதில்களும் இங்கு முழுமையாகத் தரப்படுகின்றது.**

**கேள்வி:- அரசியல் அமைப்புக்கு முரணான வகையிலே அரசு செயற்பட முனையுமாயின், அந்த நடவடிக்கையை உயர் நீதிமன்றம் தடை செய்யும் அதிகாரம் உண்டு. அது தொடர்பாகத் தங்கள் கருத்து யாது?**

பதில்:- எங்களைப் பொறுத்த வரையில் - தமிழர் தேசத்திற்கும், சிங்கள தேசத்திற்கும் இடையிலான முரண்பாடுதான் இன்றைய நிலைக்குக் காரணம். எனவே, இலங்கைத் தீவிலே சமாதானமான ஒரு சமுதாயம் உருவாக்க வேண்டுமாக இருந்தால், தீர்வுத் திட்டமானது சாத்தியமானதாகவும், யதார்த்தபூர்வமாகவும் புதிய நோக்கோடும் அணுகப்படவேண்டும். இவ்வாறான அணுகுமுறைகள் மூலமாகவே



உலக அரங்கில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் வெற்றி அளித்துள்ளன.

அந்தரீதியிலேயே, இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும் அதனை விடுத்து, அரசியல் முரண்பாடான நிலையில் இதனைப் பார்க்கக் கூடாது. ஒரு பொதுநோக்கோடு இந்தப் பிரச்சினையை அணுகினால் தான், சரியான தீர்வை எட்டமுடியும். ஆகவே, உச்சநீதிமன்றங்கள் - இலங்கை அரசாங்கம், இனவாதக் கட்சிகள், எதிர்க்கட்சிகள் என்பவற்றைத் திருப்திப்படுத்தக்கூடிய ஒரு தீர்வை எட்டவேண்டும் என நினைத்தால், அது ஒருபோதும் முடியாத காரியமாகவே இருக்கும்.

**கேள்வி:- தமிழ் மக்களுடைய ஏகபிரதிநிதிகள் என்று கூறிக் கொள்கிறீர்கள். அதில் முரண்பாடுடைய கருத்துக்கள் உள்ளனவே, அந்த நிலையில் தாங்கள் எவ்வாறு ஜன நாயகமான முறையிலே, இடைக்கால நிர்வாகத்தைக் கேட்கமுடியும்?**

பதில்:- இந்த இடத்தில் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். நாங்கள் தமிழ் மக்களுடைய ஏகபிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு இருந்தால் மட்டும் தமிழ் மக்களுடைய ஏகபிரதிநிதிகளாக வந்துவிடமுடியாது. கடந்த 25 , 30 வருடங்களாக ஆக்கிரமிப்பை மேற்கொண்ட இராணுவத்திற்கு எதிராக, நாங்கள் தொடர்ச்சியாகப் போராடி, 18 ஆயிரம் வரையான இளைஞர்கள், யுவதிகளுடைய உயிர்களைத் தியாகம் செய்துதான், நாம் இன்றைய அரசியல் அங்கீகாரம் கேட்கும் நிலைக்கு வந்திருக்கிறோம். எனவே, நாங்கள் தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் என்று தனியே பேசிக்கொண்டு, இன்று இந்த இடத்திற்கு வரவில்லை.

நீண்டகாலமாக நாங்கள் எங்களுடைய மக்களுடைய அபிலாஷைகளுக்காக, பிரச்சினைகளுக்காகப் போராடி இருக்கிறோம். எங்களுடைய தலைவர் உறுதியோடு நின்று, எந்தச் சக்திகளுக்கும் அடிபணியாது, எமது மக்களுடைய உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகப் போராடியிருக்கிறார். அதுமட்டுமல்ல, கடந்த 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது - தமிழர் தாயகப் பிரதேசத்திலே, தமிழர் கூட்டமைப்பு என்கின்ற நான்கு கட்சிகள் இணைந்த கூட்டமைப்பொன்று - முக்கியமான கோட்பாடுகளைத் தமிழ் மக்களிடம் முன்வைத்தது. அதாவது, தமிழ் மக்களுடைய ஏகபிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் என்ற கோட்பாட்டை வைத்து, தேர்தலில் போட்டியிட்டது. இதனைத் தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்ந்த பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஆதரித்து, வாக்களித்துள்ளார்கள்.

நீங்கள அனைவரும் கேள்விப்பட்டிருப்பர்கள் - எமது மக்கள் பல்வேறு இடங்களிலும் கூடி, எமது தலைவர் பிரபாகரனைத் தமது தலைவர் எனத் தமது உணர்வுகள், எழுச்சிகள் ஊடாக வெளிப்படுத்தியிருந்தார்கள்.

எத்தனையோ பலமான சக்திகள் எமது போராட்டத்தை நசுக்க முற்பட்ட போதெல்லாம், நாம் உறுதியோடு நின்று தமிழ் மக்களுடைய உரிமைகளைக் கட்டிக்காத்துப் போராடியுள்ளோம். இந்த வகையில் தான் நாங்கள் - தமிழ் மக்களுடைய பிரதிநிதிகளாக மக்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளோம், மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளோம். மக்களுடைய ஆதரவோடுதான் எமது தேசியத் தலைவர் இந்த விடுதலை இயக்கத்தைப் பாரியதொரு கட்டமைப்பாகக் கட்டிவளர்த்துள்ளார்.

எமது வளர்ச்சியின்போக்குக் காரணமாகவே, இலங்கை அரசாங்கம் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, விடுதலைப் புலிகளோடு பேசுவதற்கு முன்வந்திருக்கிறது. இதனைச் சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்த யதார்த்தத்தை முதலில் நீங்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

**கேள்வி:- உங்கள் மீது அரசியல் படுகொலைகள், சிறுவர்களைப் படைக்கு ஆட்சேர்த்தல் போன்ற காரணங்களுக்காகத் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்கள் உள்ளனவே...!**

*பதில்:-* ஊகத்தின் அடிப்படையில் எம்மீது சுமத்தப்படுகின்ற இந்த அபாண்டமான குற்றச்சாட்டை, நாங்கள் மறுக்கின்றோம். அரசியல் படுகொலைகள் சம்பந்தமாக எம்மீது குற்றஞ்சுமத்தப்படுகிறது. இந்தக் கொலைகள் அநேகமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தான் நடைபெறுகிறது. அங்கே சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்குச் சிறிலங்காவினுடைய காவல்துறை இருக்கிறது, நீதியமைச்சு இருக்கிறது, அவர்களோடு தொடர்புடைய பல்வேறு குழுக்கள் இருக்கின்றன, கண்காணிப்புக்குழு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது, பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் இயங்கி வருகின்றன. இவ்வளவு கட்டமைப்புக்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற சூழலில் நடக்கின்ற இந்தப் படுகொலைகள் தொடர்பாக, உண்மை நிலையை அறிவதற்கு முயன்றால், நிச்சயமாக உண்மை நிலையை அறியமுடியும் என நான் நினைக்கின்றேன். இது திட்டமிட்டு புலிகள் மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டாகும். இன்று சர்வதேச ரீதியிலே புலிகள் மீது ஏற்பட்டு வருகின்ற நல்ல அபிப்பிராயத்தைக் கெடுப்பதற்காக செய்யப்பட்டுள்ள திட்டமிட்ட கொலைகளாகவே நாம் இவற்றைப் பார்க்கின்றோம் துரதிஷ்டவசமாக அதிலே பாதிக்கப்படுபவர்கள் விடுதலைப் புலிகளோடு முரண்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். இந்தக் காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை குற்றஞ்சுமத்துவது இலகுவாக இருக்கிறது.

ஆனால், இலங்கை அரச இயந்திரம் இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு பகுதி என்பதால் உண்மை நிலையை அறிந்த பின்னர் குற்றச்சாட்டுக்களை சுமத்தலாம். அந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையாக இருந்து அதில் தமிழீழ விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டு இருப்பார்களாக இருந்தால் அது தொடர்பாக எமது தலைமைப் பீடம் நிச்சயமாக இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்கும். அதில் எதுவித சந்தேகமும் இல்லை. இந்த சமாதான நடவடிக்கையை எமது தலைவர் மிகுந்த அக்கறையோடும் உணர்வோடும் செயற்படுத்தி வருகிறார். இந்த வகையில் சகல மாவட்டங்கள் தோறும் எங்களுடைய தளபதிகள், பொறுப்பாளர்களுக்கு இறுக்கமான பணிப்பு தலைவரால் வழங்கப்பட்டுள்ளது. சமாதானச் சூழ்நிலையில் அதற்கு விரோதமான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது என்பது தலைவரது கண்டிப்பான, இறுக்கமான உத்தரவு, எனவே இந்த உத்தரவை மீறி அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள் நடைபெறும் என நான் நினைக்கவில்லை.

நிச்சயமாக இந்தக் கொலைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எந்த விதத்திலும் சம்பந்தமில்லை. எம்மீதான குற்றச்சாட்டை மறுக்கின்றோம். இந்தக் கொலைகளுக்கான காரணங்களை அறிந்து, உண்மை நிலையை வெளிக்கொணரும் முயற்சிகளிலும் நாங்கள் ஈடுபட்டுள்ளோம்.

இந்தப் படுகொலைகள் - சர்வதேசத்தை சமாதான முயற்சிகளில் சோர்வடையச் செய்யும் ஒரு நடவடிக்கையாகவே நாங்கள் பார்க்கிறோம்.

அடுத்த விடயமாக, சிறுவர்களைப் பலாத்காரமாக படையில் சேர்ப்பது தொடர்பான பிரச்சினை. கடந்த இரண்டு வருடகாலமாக, நாம் எமது ஆட்சேரப்பு நடவடிக்கைகளை நிறுத்தியிருக்கிறோம். எமது நூற்றுக் கணக்கான ஆட்சேர்பபு மையங்களை மூடி, நாங்கள் இப்போது அரசியற் பணியிலே ஈடுபட்டுவருகிறோம். ஆனால், புதிய பல உறுப்பினர்கள், எங்களுடைய அமைப்போடு இணைந்து கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய அரசியல் அலுவலகங்களில் அவர்களாகவே விரும்பி வந்து, எமது அமைப்பில் இணைகிறார்கள்.

இன்று நாம் எமது விடுதலை அமைப்பிலே பல்வேறுபட்ட கட்டமைப்புக்களை நிறுவிக்கொண்டு வருகிறோம்.

நிர்வாகக் கட்டமைப்புக்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பான கட்டமைப்புக்கள், எனப் பல அமைப்புக்களை நிறுவியுள்ளோம். இவையூடாக, எமது மக்களுக்கான உதவிகளை நாம் முன்னெடுத்துச் செல்வதற்கு, நிறைந்த ஆட்பலம் எமக்குத் தேவை. எனவே, புதியவர்களை இணைத்துக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

அந்தவகையிலே, நாமாக ஆட்சேர்ப்பில் ஈடுபடாதபோதும், பலர் தாமாகவே முன்வந்து ஆர்வத்தோடும், சுயவிருப்போடும் இணைந்து கொள்கிறார்கள். ஆனால், இதில் சிறுவர்களும் வருகிறார்கள். பல நூற்றுக்கணக்கான சிறுவர்கள் வந்து இணையும் நிலமை தொடர்ந்து கொண்டுள்ளது. ஏன் இணைகிறார்கள என்ற காரணத்தை நீங்கள் மீட்டுப் பார்க்கவேண்டும்.



சிறுவர்கள் மீதான பாதிப்புக்கள் இன்னும் முழுமையாக நீங்கவில்லை சிறுவர்கள் மீதான ஆக்கிரமிப்புக்கள் அதிகரித்துள்ளன. சிறுவர்களுடைய நலன்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. யுத்தத்தால் பாதிப்புற்ற சிறுவர்களுடைய மனநிலையை விட்டு, இன்னும் யுத்தத்தின் பாதிப்புக்கள் அகலவில்லை. இவர்களுக்கான புனர்வாழ்வு, நலன்புரி நடவடிக்கைகள், எதுவுமே எடுக்காத சூழ்நிலையிலே, சிறுவர்கள் எம்மிடம் வந்து தஞ்சமடைகிறார்கள்.

நாங்கள் அவர்களை தொண்டர் அமைப்புக்கள் நடாத்தும் சிறுவர் இல்லங்களில் கையளிக்கிறோம், பெற்றோர்களிடம் கையளிக்கிறோம். தற்போது யுனிசெப் நிறுவனத்தோடும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தோடும் இணைந்து நாம் ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருக்கிறோம்.

எனவே, இவ்விடயங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள், எம்மீது சுமததப்படுகின்ற தவறான குற்றச்சாட்டுக்களாகவே நாங்கள் பார்க்கிறோம்.

**கேள்வி:- வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்களுடைய முழு உரிமைகளையும், நீங்கள் எந்த வகையூடாக எதிர்பார்க்கிறீர்கள். அரசு இதனை ஏற்றுக்கொள்ளாத போது, சில திருத்தங்களைக் கொணடு வருவதற்கு நீங்கள் தயாரா? அல்லது அவ்வாறான வேளையில் புதிய வரைபொன்றைத் தயாரிப்பீர்களா?**

பதில்:- தற்போது நாங்கள் ஒரு வரைபை கையளித்துள்ளோம். இந்த வரைபு நடைமுறைச் சாத்தியமானதும், கடந்தகால அனுபவங்களைக் கொண்டும், குறிப்பாகக் கடந்த ஒன்றரை வருட காலமாக நாம் பெற்ற முன்னுதாரணங்களைக் கொண்டும், இந்த வரைபு உருவாக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும் சம பிரதிநிதித்துவத்தோடு இணைந்து உருவாக்கிய உபகுழு பற்றி உங்களுக்குத் தெரியும்.

புனர்வாழ்வு, புனர்நிர்மானம், மீள் குடியேற்றம், அபிவிருத்தி, போன்ற நோக்கங்களுக்காகவும், அவசர மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் உருவாக்கப்பட்டது இந்த உபகுழு. ஆனால், அந்த உப குழு செயற்பட முடியாத முடக்க நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கு அடிப்படைக் காரணம், வடக்கு - கிழக்கில் தெளிவான, அதிகாரமுள்ள ஒரு நிர்வாக அலகு, நடைமுறையில் இல்லாமையே ஆகும். ஆகவே, சமகால அனுபவம், கடந்தகால அனுபவம் என்பவற்றினை நாம் படிப்பினையாகக்கொண்டு எங்கள் மக்களுடைய, இன்றைய தேவைகளையும், அபிலாஷைகளையும், உள்ளடக்கி சர்வதேச அளவில், இப்படியான பிணக்குகள் ஏற்பட்டபோது அவற்றுக்கான தீர்வுகளையும், மேற்கொள்ளப்பட்ட விடயங்களையும் பரிசீலித்து, சர்வதேச ரீதியிலே பல நிபுணர்களோடு ஆராய்ந்துள்ளோம்.

இந்த அனுபவங்களைக் கொண்டு, ஒரு நடைமுறைச் சாத்தியமான வரைபையே நாம் தயாரித்துள்ளோம்.

எனவே, இலங்கை அரசு இதனை ஏற்றுக்கொள்ளும் என நாம் முழுமையாக நம்புகிறோம். சர்வதேச சமூகமும் இதனை ஏற்றுகொள்ளும் என்பதில், எமக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை உள்ளது.

எமது இந்த வரைபை ஏற்றுக் கொண்டு, அரசு பேச்சுவார்த்தைகளுக்கு முன்வரும். எனவே பேச்சுவார்த்தைகளின் போது நாம் மேலும் இவை தொடர்பாக தெளிவாக ஆராய முடியும். ஏதாவது சந்தேகங்கள் இருந்தால், நாங்கள் பேச்சுமூலம் நீக்கிக்கொள்ளலாம்.

ஆனால், நடைமுறைச் சாத்தியமான, வலுவுள்ள ஒரு இடைக்கால நிர்வாக கட்டமைப்பை, வடக்கு -கிழக்கில் ஏற்படுத்துவதென்பது தவிர்க்க முடியாததாகும்.

**கேள்வி:- வடக்கு கிழக்கிலே குடியேற்றப்பட்டுள்ள பிற இனத்தவர்களுடைய நிலை எவ்வாறாக இருக்கும்?**

பதில்:- தமிழ் மக்கள் தங்களுடைய சொந்த நிலங்களிலிருந்து, பலாத்காரமாக வெளியேற்றப்பட்டமை என்பது மிகவும் முக்கியமானதொரு பிரச்சினை. இந்தப் பிரச்சினை தொடர்பாக, இரு தரப்பினரும் பேசித் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அது பற்றிய தீர்மானம் எடுக்கும்போது, இந்த விடயம் தொடர்பாகவும் நிச்சயமாகக் கவனம் எடுக்கப்படும் என இடைக்கால நிர்வாக சபை நகலில் நாங்கள் குறிப்பிட்டுள்ளோம். பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட தமிழ் மக்களுடைய நிலங்களில், அவர்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியது அவசியமானதாகும். இது அடிப்படை மனித உரிமை ஆகும். எனவே இது கண்டிப்பாக தீர்வு காணப்பட வேண்டிய விடயமாகும்.

**கேள்வி:- வரைபு சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிலையில், ஜனாதிபதி ஆட்சயை கலைக்கலாம் எனும் நிலை உள்ளது. அது தொடர்பாக தங்கள் நிலைப்பாடு யாது.**

பதில்:- தென்னிலங்கையில் நடைபெறும் அதிகார அரசியல் போட்டிகள் சம்பந்தமாக, நாங்கள் கருத்துகள் கூற விரும்பவில்லை. இந்த அதிகாரப் போட்டிகள் சாதாரண மக்களுக்குத் தெரிந்த ஒன்று. பல வருடங்களாக, நீண்ட காலமாக சிங்கள தேசத்து அரசியலில் இருந்து வரும் வரலாற்று உண்மை அது.

எப்பொழுதும் ஆட்சியில் இருக்கின்ற அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முனையும்போது, எதிர்க் கட்சிகளும், இனவாத கட்சிகளும் அதனைக் குழப்புவது என்பது, ஐம்பது வருடகாலமாக இருந்துவரும் நிலைப்பாடாகும். அதனுடைய தொடர்ச்சியாகத்தான இன்றும் ஜனாதிபதியும் சில இனவாதக் கட்சிகளும் அரசினது சமாதான முயற்சிகளைக் குழப்பி வருகின்றனர்.

ஆகவே தென்னிலங்கை அரசியலில், தொடர்ச்சியாக நடைபெறும் இந்த நிகழ்வு தொடர்பாக எதையும் நாம் கூறமுடியாது. எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் தமிழ் மக்களுடைய அரசியல் எதிர்காலம்,

(9 ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய எழுச்சிப் பேரவையினரின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தவேண்டும்

## வலிகாமம் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

எமது உரிமைக்கான போராட்டங்களைப் பலர் கடந்த காலங்களில் மேற்கொண்டனர். ஆனால், எமது ஆயுதப்போராட்டம் வலுப் பெற்றுள்ளது. கடந்த காலங்களில் பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு, அவை கிழித்தெறியப்பட்டன. ஆனால், தேசியத்தலைவரின் காலத்தில் நிலையான ஒரு உடன் படிக்கையைப் பலமான நிலையில் நின்று முன்வைத்துள்ளோம். எமது பிரச்சினைகளை முதன் முதலாகச் சர்வதேச ஒப்புதல்களோடு முன் வைத்துள்ளோம். எமக்குச் சரியான, முழுமையான தீர்வை வழங்க வேண்டும் என வலிகாமம் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்மாறன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற, வலிகாமம் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - தேசிய எழுச்சிப் பேரவையின் செயற்பாடுகள் எமது சூழலில், எமது மக்களுக்கு - எழுச்சியையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும். இத்றகு நாங்கள் இன்றைய எமது நிலைப்பாடுகள், தொடர்பாகத் தெளிவாக இருக்க வேண்டும், தேசிய எழுச்சிப் பேரவையின் இலக்கு, உண்மையான நோக்கம் - மக்களிடம் சரியான வழியில் போய்ச்சேரவேண்டும், மக்களைச் சரியான பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டியவர்களாகவே நாங்கள் எங்களை வளப்படுத்த வேண்டும்.

எமது தலைவரின் தலைமையில் சமாதான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறன. இதனை அடிமட்ட மக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டிய பொறுப்பு உண்டு. தேசியத்தின் இன்றைய நிலையை நாளுக்கு நாள் அறிந்து, அதனைக் கிராமமட்டங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டியவர்களாகவே இந்தப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் உள்ளனர்.

ஆயுத விடுதலையாக இருந்தாலும், சமாதான முன்னெடுப்புக்களாலான விடுதலையாக இருந்தாலும் - சரியானமுறையில் முன்நின்று செயற்பட வேண்டும். சமாதானத்தை இட்டுச்செல்கின்ற தேசியத் தலைவரின் வழியில் ஒன்றிணைந்து செயற்படுபவர்களாக நாம் செயற்படவேண்டும். (44),(91)



யாழ்.மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி சுபியான் யாழ்.முஸ்லிம் பகுதியை சேர்ந்த முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# விசேட தேவையுள்ள மாணவர்களின் விபரம் கல்விப்பணிமனையால் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில், கல்வி பயிலும் மாணவர்களில் விசேட தேவை உடையோரின் விபரங்கள் - வலயக்கல்விப் பணிமனையால் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பூரண விழிப்புலனற்ற மற்றும் பார்வைக்குறைபாடு, கேட்டல் குறைபாடுடைய மாணவர்களின் விபரங்களை, எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னதாகப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), தீவகம் - வேலணை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களிடம் கேட்கப்பட்டுள்ளது.

பூரண விழிப்புலனற்ற மாணவர்களுக்குரிய பிறெய்லி பாடப்புத்தகங்கள் தேவையாயின், அவை தொடர்பான விபரங்களையும் மற்றும் கேட்டல் குறைபாடு, பார்வைக் குறைபாடுடைய மாணவர்களின் விபரங்களையும் உரிய வகுப்பாசிரியர் ஊடாகச் சேகரித்து அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(83)

## இலவச மருத்துவ சேவை

கைதடி சித்த மருத்துவ போதனா வைத்தியசாலையில், கொரிய நாட்டை சேர்ந்த 15 மருந்துவர்கள் இலவச சிகிச்சையை மேற்கொள்ளவுள்ளனர்.

வாதரோகங்கள், சுவாசரோகங்கள், மூட்டுவலி மற்றும் பிறநோயால் பாதிக்கப்பட்ட - வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட நோயாளர்கள் - எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் - கைதடி சித்தவைத்திய போதனா வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் பதிவுகளை மேற்கொண்டு, சிகிச்சை பெறுமாறு, மானிப்பாய் பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் கேட்டுள்ளார். (44)

# வலதுகுறைந்தோரைப் பராமரிக்கும் தொண்டர்களுக்கான பயிற்சி நெறி

வலது குறைந்தோரைச் சமுதாய மட்டத்தில் காத்துப் பராமரிப்பதற்காகத் தொண்டர்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சிநெறி - எதிர்வரும் 6 ஆம் திகதிமுதல் 15 ஆம் திகதிவரை - வேலணை பல.நோ.கூ. சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளிலிருந்து, தலா 10 பேர் தெரிவு செய்யப்பட்டு, பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பயிற்சியில் கலந்துகொள்வோருக்கு இலவச மதிய உணவும், ஒரு நாளுக்கு 50 ரூபா வீதம் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது. தீவக மட்டத்திலான இந்தப் பயிற்சிநெறியினை - வேலணை பிரதேச செயலகம் ஏற்பாடு செய்துள்ளதுடன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கும் இது தொடர்பாக அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (113)

## சமுர்த்தி வங்கி அடிக்கல் நாட்டுவிழா

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வலயம் ஒன்றிற்கான சமுர்த்தி வங்கிக்கான அடிக்கல் நாட்டுவிழா - சமுர்த்தி வங்கி அமைப்பற்கென கட்டுடையில் வழங்கப்பட்ட காணியில் இன்று நடைபெறவுள்ளது.

உதவிப் பிரதேச செயலர் எஸ். செல்வராஜா மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள் ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (44)

# உலர்உணவுப்பொருட்கள் வழங்காமையால் மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் பாதிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மக்களுக்கு - உலர் உணவு நிவாரணம் பெறுவோருக்கான ஆவணி மாதத்துக்கான உலர் உணவுப் பொருட்கள் இதுவரைக்கும் வழங்கப்படவில்லை.

இந்நிலையினால், உலர் உணவு நிவாரணத்தையே நம்பிவாழும் பல குடும்பங்கள், பலத்த நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றன.

இந்தியாவிலிருந்து மீளக் குடியமர்ந்த பல குடும்பங்களும் ஆவணி மாத நிவாரணம் கிடைக்காமையினால் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதும் குறிப்பிடத்தக்கது. கடந்த மாத நடுப்பகுதியில் உலர் உணவு முத்திரைகள் வழங்கப்பட்டபோதும், இதற்கான பொருட்கள் விநியோகிக்கப்படாமையால் நிவாரணம் பெறுவோர் இது தொடர்பாக விசனம் தெரிவித்துள்ளனர். (113)

## கிறிஸ்தவ சங்கத்தால் உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்.கிறிஸ்தவ சங்கத்தால், 35 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் - சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் தண்ணீர் தொட்டி, மின்மோட்டார், இரத்தத்தில் சீனியின் அளவைக் கணிப்பிடும் தகடுகள் 750 ஆகியவை - கிறிஸ்தவ சங்க பிரதிநிதிகளால் - வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டொக்டர் ச. அம்பிகைபாகனிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (44)

# அடிப்படை வசதிகள் இல்லை அரசு உடன் உதவ வேண்டும்

## பொது அமைப்புகள் கோரிக்கை

வடமராட்சி கிழக்கின் - மணற்காடு மற்றும் அதனையண்டிய பகுதிகளின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு, அந்தப்பகுதிப் பொது அமைப்புக்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

எதுவித காரணமும் தெரிவிக்கப்படாமல், கடந்த சில மாதங்களாக வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் வசிக்கும் இருநூற்றுக்கும் மேலான மீனவக் குடும்பங்களின் நிவாரணம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால், அந்த மீனவர் குடும்பங்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றன.

எனவே இந்தக் குடும்பங்களுக்கான நிவாரணங்களை உடன் வழங்குதல் வேண்டும். அத்தோடு இந்தப் பகுதி மக்கள் பல அடிப்படை வசதிகள் அற்றநிலையில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

## படகுக்கான கட்டணம் உயர்வு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு - குறிக்கட்டுவானுக்கு இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட்டுவரும் - நெடுந்தீவு பல.நோ. கூட்டுறவுச் சங்கப் படகுகளின் கட்டணம், கடந்த முதலாம் திகதி முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஒரு வழிக் கட்டணமாக 10 ரூபா அறவிடப்பட்டு வந்தது. 1 ஆம் திகதிமுதல் இந்தக் கட்டணம் 15 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதாகப் பல.நோ.கூ.சங்க நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (113)

## வடிகால் துர்நாற்றம் வீசுவதால் மக்கள் அசௌகரியம்

குருநகர் சென்றோக் வீதியில் உள்ள வடிகால் - அப்பகுதிகளுக்குப் பொறுப்பாகவுள்ள சுகாதாரப் பகுதி ஊழியர்களினால் துப்புரவு செய்யப்படாததால், அப்பகுதியில் இருந்து பெரும் துர்நாற்றம் வீசுகிறது. இதனால், அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மழைகாலமாதலால், அந்த வடிகாலில் தேங்கி நிற்கும் வெள்ளத்தால் தொற்று நோய்கள் பரவ வாய்ப்புள்ளதாகவும், இது பற்றி உரிய அதிகாரிகளிடம் முறையிட்டும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (55)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : கு.ரமேஷ்
முகவரி : ஏழாலை.

நான்காவது அகவையில்

பெயர் : க.மதனிக்கா
முகவரி : சிவரேகா மகால், பண்டத்தரிப்பு.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



--------------------
பெற்றார் ஒப்பம்

சிங்கள எழுத்திலக்கியத்துறையில் பிரசித்தமான பெண் எழுத்தாளரான திலினா வீரசிங்க - 'அறியப்படாத பெண்' (1996.03.08), 'வெளியேற்றப்பட்ட பெண்' (1997.03.08) எனும் இரண்டு சிறுகதைத் தொகுதிகளினதும், 'வணக்கத்துக்குரிய கடவுளும் இருட்டான இரவும்' என்ற நாவலினதும் சொந்தக்காரர். 'நானும் நாங்களும்' 'நீதி மன்றத்துக்கு வந்த சிப்பாய்', 'எதிர்பார்ப்பின் காலம்', 'கடவுளின் விருப்பம்' போன்றன அவரின் அழகான கதைகளில் சிலவாகும். தமிழில் 'சரிநிகர்' பத்திரிகை மொழிபெயர்ப்புக்களினால் பரவலாக அறியப்பட்டவர். புதுமையாள முறையில் கவிதைகளைப் படைக்கத்தக்க, ஈழத்தில் மிக அறியப்பட்ட இப்பெண் எழுத்தாளரின் 'அறியப்படாத பெண்' மொழபெயர்ப்பு ஆக்கம் இங்குதரப்படுகிறது. இது தமிழ்ச்சிறுகதை எழுத்தாளர்களுக்கு ஒரு புதிய தரிசனத்தை ஏற்படுத்தவல்லது.

# அறியப்படாத பெண்

அவள் தற்கொலை செய்துகொண்டாள். அவளது சடலத்தை முதலில் கண்ட கிராமவாசி அவ்வாறு சொன்னான். அதன் பிற்பாடு அது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கதையாகிவிட்டது. இராணுவத்தினர் இருவரும், பொலிஸ்காரர் சிலபேரும் அவ்விடத்திற்கு வந்தார்கள்.

'இவ்விடத்திலுள்ள யாராவது இப்பெண்ணை அறிவீர்களா?'

உச்சஸ்தாயியில் இருந்த இராணுவ அதிகாரியின் கேள்விக்கு, எந்தவிதமான பதிலும் இல்லை.

'இப் பெண்ணைத்



தெரிந்தவர்கள் யாராவது இருந்தால், தயவுசெய்து முன்னுக்கு வாருங்கள்.'

அவர் இன்னும் உரத்துச் சத்தம் போட்டார்.

இருந்தும், அதற்கு விடை எதிர்பார்க்கவில்லை. அது அச்சந்தர்ப்பத்துக்கு ஏற்ப கேட்கப்படவேண்டிய கேள்வி.

எல்லோரும் அறிந்துகொண்ட விடயம் - அவள் தமிழ்ப் பெண் ஆவாள். அவளின் உடல் கருமையாக கரியநிறமாக இருந்தது. மூக்கில் மூக்குத்தி ஒன்று மீதியிருந்தது. அவளுக்குச் சொற்ப தூரத்தில் இருந்து அவளின் உடலிருந்து சாவதற்கு முன்னர் அப்புறப்படுத்தப்பட்ட கிழிந்து போன உடுபுடவை நிசப்தமான பொதியாகச் சிதறுண்டு கிடந்தது. தூர எறியப்பட்ட கிழிந்துபோன துணிகள், காற்றிலாடிக் கொண்டிருந்தன.

எல்லோருக்கும் தெரியும்படியாக முன்னமைந்த மார்புப் பகுதி மற்றைய பெண்கள் போலவே வட்டவடிவத்தில் இருந்த போதிலும் அதன் மேற்பகுதி கபிலநிறமாக இருந்தது. சிறிய உதடுகளினால் பாலுறிஞ்சிக் குடிக்கப்பட்ட மார்பு மாதிரி அது தோற்றமளித்தது. மார்புகளின் இடைப்பட்ட நெஞ்சுப் பகுதி சிறிது சேரத்தின் முன்னால் கஷ்டமாக மூச்சு விட்டதை அறிப்பது போலவும் மீளவும் அக்கஷ்டம் வராத மாதிரியும் நிரந்தரமாக ஓய்வு எடுக்கத்தொடங்கியிருந்தது.' அவளது கால்கள் இரண்டும் தொடைகளுக்கிடைப்பகுதியும் கஷ்டத்தின் பின்னர் ஒரு அமைதியைத் தேடுவதாக இருந்தன. கபில நிறமான மூடப்பட்டு விரிந்திருந்த கண்கள் உண்மையிலேயே எதற்கோ எதிர்ப்புத் தெரிவித்ததாகத் தோன்றியது.

கபில நிறத்திற்கும் கருமை நிறத்திற்கும் இடைப்பட்ட சிக்குண்ட கேசம் நிலத்தல் ஒடி வடிவமுமின்றி விரிந்து கிடந்தது.

பாதி மூடப்பட்டிருந்த கண்கள் உயிரிலிருந்து விடுபட விருப்பமில்லாத மாதிரி காட்சியளித்தன. தான் செல்லும் பயணத்தின் முடிவற்ற தன்மையை அப்பார்வை கொண்டிருந்தது. அது சடலத்தைச் சுற்றியிருப்பவர்களுக்குப் புரிந்துகொள்ள முடியாதிருந்தது. அவளது வாழ்வின் காலத்தில் சாவுபற்றி எவருக்கும் தெரியாத காரணங்கள் அவளின் கண்களில் நிரம்பியிருந்தன.

"இப்பிள்ளையைக் கெடுத்து...... அவளை சாகடித்தது......" அவ்வறான ஒரு மூச்சுக்கூட அங்கு எழும்பவில்லை.

"எல்லைக் கிராமத்தின் சண்டைநடக்கும் பகுதிக்கு அவள் ஏன் வந்தாள்?"

அவளின் சாவையோ அல்லது கொலையையோ ஜீரணித்துபடி, எல்லோரும் ஆச்சரியத்துடனும், பயத்துடனும் இருந்த காரணம் அதுவாகும். மனிதர்கள் போல அருகிலிருந்த மரங்களே கிழ்ப்பகுதியில் ஓடும் ஆறோ அவளது மரணத்திற்குச் சாட்சி சொல்லவில்லை. மனிதர் சிந்திப்பது போல, ஆற்றுநீரும் மெதுவாக ஒன்றுமே காணாத மாதிரி அமைதியாகச் செல்லும்படி கட்வுள் அறிவித்திருந்தார். போலும்.

அவளது திறந்த மார்புப்பகுதியிலிருந்து முழங்கால்வரை மூடும்படியாகக் கிழிந்துபோன ஒரு துணி எஞ்சியிருந்தது

'இச்சடலத்தை முதலில் கண்டவர் வாக்குமூலம் எடுப்பதற்காக அவளது மரணம் சம்பந்தமாகச் சாட்சியம் அளிக்க விரும்பிய மனிதனும் - இவ்வாறான விசாரணைகளில் நேரவிரயஞ்செய்ய விரும்பாத பொலிஸ்காரரும், இராணுவச் சிப்பாயுடனும், அவளது சடலத்துடனும் இராணுவ முகாமுக்குப் போகவேண்டியிருந்தது.

விசாரணை ஏதோமாதிரி ஒன்றாக இருக்கலாம். அதில் அவளுக்கு ஏதாவது ஊரும் பேரும் கொடுக்கப்பட்டலாம். சிலவேளை லட்சுமி, தங்கம்மா, ராணி, சரஸ்வதி இல்லாவிட்டால் வேறு ஏதாவது தமிழ்பெண் கொள்ளத்தக்க பெயரொன்று அவளுக்குக் கிடைக்கும். அவள் யார் என்பதை அவள் மட்டுந்தான் அறிவாள். அன்றியும், அவள் பற்றிய முடிவுகளை எடுப்பதற்குக் கடவுளோ, அவளது கொலையை இரவில் கண்ட நிசப்த நதியோ இல்லாவிட்டால், அவளது

## இலக்கியச்சோலை

நிர்வாண உடலை மூடியிருக்கும் மஞ்சள்சநிற இலைகளைத் தூவிய மரஞ்செடிகளோதான் வல்லவர்கள்.

அவள் இராணுவ முகாமிற்குச் செல்லவேண்டிய தேவை எப்போதும் இருந்திருக்காது. அவளின் கிராமமும் போரின் ஒரு பகுதியாகவே இருந்திருந்தால், கிராமத்துக்கு மிக அண்மையிலுள்ள இராணுவ முகாமிக்கு அவள் இதற்கு முன்னரும் போயிருந்திருக்கலாம். இல்லாவிட்டால், அவளைக் கூட்டிக்கொண்டோ, அவள் விரும்பாத வகையில் கூட்டிக் கொண்டோ போயிருக்கக்கூடும். அவள் ஒரு இராணுவச் சிப்பாயின் மணமகளாகச் சிலமணித்தியாளங்கள் அல்லது இரண்டு மூன்று நாட்கள் தங்கியிருந்திருக்கக்கூடும். சில நேரம் தனது கிராமத்திலிருந்த சினேகிதிகள்போல, தேனிலவின் பின் காதலனைக் காணமுடியாத இன்னுமொரு பெண்ணைப்போல - அவளும் இராணுவ முகாமிலிருந்து வெளியே சென்றிருக்கலாம். வேதனையிலும், சோகத்திலும் இல்லாவிட்டால் கோபத்திலும் அவள் சந்திக்கும் காதலனைத் தேடி சென்ற பயணம்... இரவு மாத்திரம் சந்திக்கும் காதலனிடம் விடைபெறச்சென்ற பயணம்... இல்லாவிட்டால் யுத்தத்திற்குப் பயந்து ஓடிச்செல்ல முயற்சித்து... இவை எல்லாமாகவும் இருக்கலாம்.

அவள் பாடசாலைக்குச் சென்றாளா? எழுத்து எழுதப் படிக்கத் தெரிந்திருந்தாளா? பிறருடன் தயக்கமின்றிக் கதைக்கத் தெரிந்திருந்தாளா? பகலுக்கோ அல்லது இரவுக்கோ அவளுக்குச் சாப்பாடு கிடைத்ததா.? இது பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது.

அயல்கிராமவாசிகள் பயத்துடனும், சந்தேகத்துடனும் மட்டும் வாழ்கிறார்கள். அவர்கள் ஆண்கள்பற்றியோ, பெண்கள்பற்றியோகூடச் சிந்திக்கமாட்டார்கள், தேடமாட்டார்கள். தம்மிடம் உள்ளவை பற்றியே சிந்திக்க வழியற்ற மக்களுக்கு - விடிகாலையில் ஒரு பெண்ணின் நிர்வாண உடல் கிடைத்தது.

அவளின் மூக்கில் மூக்குத்தி மிஞ்சியிருந்தது. அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்.

சடலம் வெகுவிரைவில் கிராமத்திலிருந்து எடுக்கப்பட்டு விட்டால், அதுவே அவர்களுக்குப்போதும். அவள் தானாகவே தற்கொலை செய்துகொண்டாள்! அவ்வுடம்பு விரைவில் அடக்கம் செய்யப்படும்.

**சாரங்கா**

---

# இசை உலகின் முடிசூடா மன்னர்

## இசைமகாமேதை செம்மங்குடி சிறீனிவாசையர்

**1908** ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27 ஆம் திகதி கும்பகோணம் தாலுகா செம்மங்குடியில் இவர் பிறந்தார். இவரது சொந்த மாமன் பிடில் கிருஸ்ணஐயர். இவரது முதற்குரு செம்மங்குடி நாராயணஐயர். ஒன்பது வயதில் இவரிடம் இசையை முறையாகக் கற்கத்தொடங்கிய சில நாட்களில், திருவுடை மருதூர் கோட்டுவாத்திய விற்பன்னர் ஸ்ரீசாகாராமராவின் நேரடி மாணவராக இருந்து பயிற்சி பெற்றார். இவரது உடன் நண்பர்களாக மருத்துவக்குடி சுந்தரம் ஐயர், தேவகோட்டை நாராணயஐயங்கார் (கோட்டு வாத்தியம்), ஸ்ரீகணேசஐயர் போன்றவர்கள் உடனிருந்தனர். வயதில் இளைய செம்மங்குடி அவர்களுடன் சிறந்த இளம் விதுவனாகத் தேறினார். தமது குரு சென்ற இடமெல்லாம் இவரும் சென்று, பல இசை மேதைகளது கச்சேரிகளைக் கேட்கும் வாய்ப்பு இவருக்கு அடிக்கடி ஏற்பட்டது.

திருவாவடுதுறைக்கு அருகில், இவர் திருவிடை மருதூரில் இசைப்பயிற்சி பெற்று வாழ்ந்ததால், திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்று, அங்கு அடிக்கடி நிகழும் பிரபல நாதஸ்வர மேதைகளது நிகழ்ச்சியைக் கண்டுகளித்து, ஆனந்தம் அடையும் வாய்ப்பு இவருக்கு நன்கு கிடைத்தது. இவரது குருகுலவாசம் இவ்வாறான வாய்ப்பைத் தேடித் தந்தது. முதல் நாள் பார்க்கும் கச்சேரிகளில் கிடைத்த விடயங்களை எல்லாம், மறுநாள் அப்படியே பாடுவதில் சமர்த்தராக, கேள்வி நிரம்பியவராகச் சீனிவாசன் விளங் கினார்.

அக்காலத்தில் திருவிடைமருதூர் தபால் அதிபராகப் பிரபல அறிஞரான ராமசுவாமி ஐயர் என்ற சிறந்த சங்கீத ரசிகர் அங்கு கடமைபுரிந்தார்.

வருடந்தோறும் கந்தசஷ்டிவிழா - சுப்ரமணிய பெருமானது இசைவிழாவாகவே நடந்தது. இங்கு கோணோறிராஜபுரம் வைத்தியநாதையர், மதுரை ஸ்ரீபுஸ்பவனம், பிடில் கோவிநதசாமிப்பிள்ளை, கும்பகோணம் அழகநம்பியாபிள்ளை போன்ற பல புகழ்பெற்ற வித்வான்கள் வருடாவருடம் இவ்

**இசையரசு, சங்கீத கலாபூஷண் நா.வி.மு.நவரெத்தினம்**

விழாவில் கலந்துகொள்வர். இது பையனான செம்மங்குடியின் கேள்வி ஞானத்தை அருமையாக வளர்க்க பெரிதும் உதவியது. திருப்பனந்தாள், திருவிசை நல்லூர், கோவிந்தபுரம், கும்பகோணம், மாயவரம், திருபுவனம், சுவாமிமலை, போன்ற இடங்ளில் அடிக்கடி நடைபெறும் இசை வேள்வி- சிறுவனான ஸ்ரீநிவாசனை நன்கு ஈர்த்துக்கொண்டது. இவ்வேளையில், இவரது குரு உடல்நலமில்லாமல் தளர்ச்சியுற்ற வேளை, தாங்கமுடியாத மனத்துயரத்துடன் 1920 ஆம் ஆண்டு குருவைப் பிரிந்து, கும்பகோணத்தில் வந்து தங்கினார்.

இக்காலத்தில் உமையாள்புரம் சாமிநாதையர் இவருக்குப் பாடம் சொல் லிக் கொடுத்தார். இக் காலத்தில்

ருக்குப் பாடம் சொல் லிக் கொடுத்தார். இக் காலத்தில் ஸ்ரீநிவாசையர் தமது அண்ணன் பிடில் மேதை செம்மங்குடி நாராயணன்சாமிகளிடம் இசைப்பாடல்களைத் கேட்டுத் தெளிந்தார்.

இக்காலத்தில் உமையாள்புரம் ஸ்ரீநிவாசையரது கடைப்பார்வையும் இவருக்குக் கிட்டியது. இக்காலத்தில் இசைச்சாதகம் இல்லாதபொழுதே கிடையாது எனலாம். தினமும் எட்டுமணி நேரம் சாதகம்..

இக்காலத்தில் இவரது குருவாக மகாராசபுரம் விஸ்வநாதையர் கிடைத்தார். இச்சந்தர்ப்பத்தில் இசைநிகழ்ச்சிகளில் தாமும் பங்குகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

1926 ஆம் வருடம் திருமணம் முடித்த கையோடு, இவரது முதற்கச்சேரி திருவிசைநல்லூரில் நடைபெற்றது. 1931 இல் இவர் இசையுலகில் பிரபலம் அடைந்தார். இசை ஞானபாவம், - இவரது கச்சேரிக்கு புதிய உத்வேகத்தை தந்தன. மத்திம காலத்திலும், துரிதகாலத்திலும் இவரது கச்சேரிகள் களைகட்டி அலைவீசும்நிலை தமிழகம் எங்கும் காணக்கூடிய தாக இருந்தது. இவர் மனோதர்மத்தில் எழுப்பும் இசைமாளிகை மனோதர்ம, ரஞ்சிதகான, பிர்க்காதுரிதகால பிரயோகங்களால் சித்திர, அதிசித்திர விஸ்வமார்க்கங்களை வெளிப்படுத்தும் கருவாக அமைந்து நிற்பதைக்காணலாம். ரசிகர்களது உணர்வும், வேகமும், அதில் வேகமாக ஊடுருவி, இசை லீலைகளை அனுபவிக்கத் தொடங்கிவிடுவதைக் காணலாம்.

மகாகவி சுப்ரமணியபாரதியாரின் பாடல்களில் செம்மங்குடிக்கு தனி அலாதிவிருப்பம். தனது கச்சேரிகளில் அவர் பாடலகளை நிறையவே பாடியுள்ளார். அவற்றில் 'என்று தணியும் இந்த சுதந்திரதாகம்', 'ஆசைமுகம் மறந்துபோச்சே' என அடுக்கிக்கொண்டே போகலாம்.

1927 ஆம் ஆண்டு சென்னை காங்கிரஸ் மகாநாட்டிலும் இவரது இசை இடம்பெற்றது. 1931 இல் இவரது ஒலிப்பதிவு முதலில் வெளியாகியது. 1939 இல் திருவாங்கூர் சமஸ்தான வித்துவானாகவும், 1941 இல் சுவாதி திருநாள் இசை அக்கடமி தலைவராக இருந்து, அவரது உருப்படிகளை உலகறியச் செய்த பெருமை இவரையே சாரும். அதுபோன்று சதாசிவ பிரமேந்திரன் நாராயணதீர்த்தர், ஜெயதேவர் போன்றவர்களின் இசை உருப்படிகளையும் உலகறியச்செய்த மாமேதை செம்மங்குடியேயாவார்.

இவர் பாடிய உருப்படிகளில் தென்னாட்டவர்களைக் கவர்ந்த உருப்படியாக - 'பக்கல நிலபடி', 'மாருபல்க மானச சஞ்சரரே', 'துங்கதரங்கே ஞானமுசகராத மரிவேரதி' எல்லாம் இசைத் தட்டுக்களாக இசையுலகில் பவனிவருபவை.

சென்னை சங்கீதவித்வசபை - இத்துணை வளர்ச்சிபெற முக்கிய காரணியாக விளங்கியவர் இவரே. இதன் நிபுணர்குழு,



சங்கீத கலாநிதி ஸ்ரீநிவாச ஐயர்

தலைமைக்குழு அனைத்திலும் முக்கியமானவர். பிரபல இசைத்தட்டு வெளியீட்டு நிறுவனமான கொலம்பியா, கிராமபோன் கம்பனி - இவரது பாடல்களை ஒலிப்பதிவுசெய்து, வெளியிட்டு பெருமையடைந்தது. 1957-1960 இல், அகில இந்திய வானொலியில் பிரதம இசைநிகழ்ச்சி அலுவலராகப் பணிபுரிந்துள்ளார். சென்னை, திருச்சி, திருவனந்தபுரம், தூத்துக்குடி வானொலியில் இசை வளச்சிக்கு இவர் முக்கிய கருவாக விளங்கினார்.

1947 இல் சங்கீத கலாநிதி பட்டமும், 1945 இல் திருவாங்கூரில் சங்கீத ராஜசேவர் என்ற பட்டமும், 1953 இல் புதுடில்லியில் கி.ராஜன்பாபு ஜனாதிபதி விருதும், 1957 இல் சிருங்கேரி மடத்தால் ராகரத்னாகர விருதும், 1969 இல் தமிழிசைச் சங்கத்தால் இசைப்பேரறிஞர் விருதும், பத்மபூஷன் விருதும், மதுர கலாப்ரவீன விருதும், சங்கீதசாம்ராஜ்ய விருதும் கிடைத்தது. 1974 இல் சங்கீத கலாசிகாமணி விருதும் கிடைத்தது.

இசையுலகின் தனிப்பெரும் முடிசூடாமன்னாக 95 வருடங்கள் வாழ்ந்து, எத்தனையோ சங்கீத உலகின் மாமாவாக, அனைத்துலக அறிஞர்களின் உள்ளங்களையும் கவர்ந்த சங்கீதகானமேரு, சங்கீத கலாநிதி செம்மங்குடியின் அமரத்துவம் - அவர் உபாலித்த முருகன் பாதத்திலே சஷ்டியில் சாயுச்சம் அடைந்தது.

'வையத்துள் இசை வாழ்வாங்கு வாழ்ந்த
மேதை ஆத்மா, பராமாத்வுடன்
சஷ்டியில் இரண்டறக்கலந்தது.'

# மோதியே பார்க்குலாம்

கருணைக் கடலென்று
சொல்வதற்கு
நீ
காருண்யமானவள் இல்லைத்தான்.
ஆயினும்
உரிமையை உள்ளபடி
ஏற்றுக் கொள்வதற்குக்கூட
உனது மனம்
தயாராக இல்லை.
உரிமையையே
உதறித் தள்ளும் உன்னிடம்
எப்படி
நீதியை எதிர்பார்க்க முடியும்?
கண்டவர்களிடமெல்லாம்
உதவி கேட்கிறாய்.
உந்தன் குடியைக்
கெடுத்தவர்களுடனெல்லாம்
குடித்துக் கும்மாளம்
போடுகிறாய்.
ஆக......
உனக்குத் தொடர்ந்து
இருப்பதற்கு
இன்றைய இடம்
என்றுமே வேண்டும்.
எமக்கோ இருப்பதற்கே
இடமில்லை.
என்ன சொல்கிறாய் நீ?
உனது பேச்சை நம்பி
என்றுமே நாம்
இருக்கவில்லை.
வெறியில் கூத்தடிக்கும்
உன்னிடமெல்லாம்
உரிமையை
எதிர்பார்க்க முடியாது.
எம்மிடம் பலமுண்டு.
இலட்சியமுண்டு.
பேசிப் பயனில்லை யெனில்
உரிமையை வென்றெடுப்பதற்கு
நம்பிக்கை நிறையவே உண்டு.
என்ன சொல்லுகிறாய்?
மோதிப் பார்ப்பதற்கு எண்ணமிருப்பின்
சொல்லிவிடு
மோதியே பார்த்துவிடுவோம்.



ஆ.சூரியன்

# கவிதைச் சோலை



# ஒரு அகதியின் அவலங்

வானத்தில் குண்டுகளின் கூவல்கள்
கேட்கின்றன
விளைநிலங்களில் பூக்களும் பிஞ்சுகளும்
பிய்ந்து பிய்ந்து உதிர்கின்றன....
நாய்களின் ஓலங்கள்
நடுத்தெருவில் மந்தைக் கூட்டங்களின்
உறங்கல்கள் போல்
மக்கள் கூட்டங்கள்
ஒன்று சேர்ந்து அழவைக்கின்றன
ஒப்பாரி..., முகாரி....
இவையிரண்டும் இரங்கல்களின்
இறுதி வடிவமோ?

நாடோடிப் பாட்டு - எங்கள்
காதுகளில் மட்டுமே எதிரொலித்தன.
இப்போது,
ஈழத்தமிழர் நாங்கள்
நாடோடி
நடைபிணங்களான பின்பும்
பிணங்களைச் சுமந்து
நெஞ்சு கிழிந்து இரத்தம் வழிய
திசையறியா திசைநோக்கி
செல்கிறோம்...

இப்போது,
நெஞ்சை அடைக்கிறது
துயரம்.
நீள் தொலைவுவரை
யாருமே இல்லை...!
கள்ளிக்காடுகளையும்,
சாம்பல் பூத்த மேடுகளையும் தவிர,
யாருமே இல்லை...!

தொட்டுத் திரும்புகின்றன
சுடுகாற்று
எங்கள் அழுகுரல்களே
மீண்டும் மீண்டும் எதிரொலித்து
எங்கள் காதுகளில் விழுகின்றன...

நடந்து வந்த தூரங்களை
எங்களால் கணக்கிலிட முடியவில்லை.
இழந்துவந்த ஊர்களைச் சொல்ல
நாவுக்குப் பலமில்லை - வேணுமென்றால்
நிலத்தில் விழுகின்ற
கண்ணீர் துளிகளை எண்ணிக்கொள்ளுங்கள்
எங்கள் பரிதாபம் புரியும்.

முருகையா சுதேசிகன்

# நூல் அகம்

## கனவுகள் கற்பனைகள்




கனவுகள் கற்பனைகள் என்னும் சிறுகதைத் தொகுதி, அண்மையில் வெளிவந்துள்ளது. கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் அதிபர் கே.வி.குணசேகரம் இந்தத் தொகுப்பின் சிறுகதைகளை எழுதியுள்ளார்.

'கனவான கனவுகள்' என்ற பெயரும் இந்தத் தொகுப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. 'சத்திய பாரதி பதிப்பகம்' இந்தக் கதைத் தொகுப்பினைப் பதிப்பித்துள்ளது.

தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களை, மானிடநேயத்துடனும், நுட்பத்துடனும் குணசேகரத்தின் பேனா சொற்சித்திரமாக்குகின்றது. பாத்திரங்களை - பாத்திரங்களின் இயல்போடும், பலத்தோடும், பலவீனத்தோடும் பதிவு செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தையும், முயற்சியையும் இந்தத் தொகுதியிலுள்ள கதைகள் பிரகடனப்படுத்துகின்றன என்று, 'சிகரங்களைத் தொடவேண்டும்' குணசேகரன் என்ற வகையில் இந்தத் தொகுப்பிற்குச் செ.யோகநாதன் எழுதிய முன்னுரை அமைகின்றது.

கனவான கனவுகள் என்ற சிறுதைத் தொகுதியில்- பதினொரு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இந்தச் சிறுகதைகளின் பொருளமைதியைக்கொண்டு- அதனை மூன்று வகையிலே பகுக்கமுடிகின்றது. அதிபர், ஆசிரியர் பதவிதொடர்பான கருக்களைக் கொண்டமைந்த கதைகள் மூன்று காணப்படுகின்றன. மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் தொடர்பாக ஐந்து கதைகள் காணப்படுகின்றன. ஏனைய மூன்று கதைகளும் சமூகத்தில் நிலவும் பொதுவான பிரச்சினைகள் தொடர்பாக எழுதப்பட்டுள்ளன.

அதிபர், ஆசிரியர் தொடர்பாக இந்தச் சிறுகதைத் தொகுதியில் இடம்பெறும் கதைகள் மூன்றும், பதவி தொடர்பான கதைகளாகவே அமைகின்றன. அதிபர் பதவியில் உள்ள ஒருவருக்கு எந்த வகையான 'நிர்ப்பந்தங்கள்' ஏற்படும் என்பது தொடர்பாகவும், ஆசிரியர் பணியை ஒழுங்காகவும், நேர்மையாகவும் செய்யும் ஒருவர் - எந்தவகையில் ஏனைய ஆசிரிய சமூகத்தால் நோக்கப்படுகிறார்கள் என்பது தொடர்பாகவும் கதைகள் எழுதப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற சிறந்த ஆசிரியர் விருது - எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றது என்பதனை - கே.வி.குணசேகரம் சித்தரித்துள்ளார். நேர்மையான ஆசிரியரின் உள்ளக்குமுறல்களே இந்தக் கதைகளில் அநேகம் இடம்பிடித்துள்ளன.

பெற்றோர், மாணவர்கள் தொடர்பாக இடம் பெறுகின்ற கதைகளில், பெற்றோரின் ஆசைகளும், அந்த ஆசைகளைத் தம்முடைய குழந்தைகள் நிறைவேற்றவேண்டும் என்ற அங்கலாய்ப்பும் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. பெற்றோர்கள்- தங்களுடைய குழந்தைகள் பெரிய பாடசாலைகளில் படிக்கவேண்டும் என்ற ஆசையுடையவர்களாக இருப்பதும், மாணவர்கள் பெரிய பாடசாலைகளுக்குச் சென்று எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அழகாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

மாணவிகள்- கல்வியைத் தொடரமுடியாமல், கல்யாண வாழ்க்கைக்குச் செல்கின்ற அவலத்தையும், கல்யாண வாழ்விற்குச் செல்லவேண்டி இருக்கின்ற கட்டாயநிலைகளையும் கதையாசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

இலட்சியம் ஒன்றினை நோக்கி வாழ்கின்ற மாணவியர் வாழ்வில் - கனவாகிப் போகின்ற கனவுகளை நன்றாக எடுத்துக்காட்டியுள்ளார்.

அறமல்லாத வழியில், பொருள் சேர்ப்பதால் உண்டாகின்ற அவலமானநிலையும், தன்னுடைய காதலனின் வருகையை நினைத்து - 'நித்தம் நித்தம்' இன்ப அதிர்ச்சியில் இருக்கும் காதலியின் மனவுணர்வும், பின்னர் காதலிக்கு ஏற்படும் அதிர்ச்சியும் அழகாக விபரிக்கப்பட்டுள்ளது.

உறவுகள் - பழமரத்தை தேடிவருகின்ற நிலைமையும், தம்முடைய காரியங்களுக்காகவே உறவுதொடர்கின்ற இன்றையகால அவலமும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

'கனவுகள் கற்பனைகள்' என்ற இந்தச் சிறுகதைத் தொகுப்பை நோக்குகின்றபோது - ஆசிரியர், மாணவர் தொடர்பாகத் தமிழில் படைப்புக்கள் குறைவாக இருக்கின்றது என்றநிலையைப் போக்கும் வகையில்- ஆசிரியர், மாணவர் தொடர்பான பல கதைகள், இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளமையைக் காணமுடிகின்றது.

பூ.நகுலன்.

# கிழக்கும் மேற்கும்

## ஆருணி-கான்சு



வீட்டுக்கு கான்சு வருகின்ற பாதையில்
தந்தை நடந்தார் கான்சுவைத் தேடி!!
தன்விளக் கொளியினில் கடல் மதில் அருகினில்
தன்னந் தனிமையில் காரிருட்டினிலே
தன் மகன் இருப்பதைக் கண்டார் தந்தை!
கான்சுவைக் கண்டதும் வியந்து நின்றவர்
கான்சுவின் அருகே விரைந்து சென்றார்!

தந்தையைக் கண்டதும் சிறுவன் கான்சுவின்
சிந்தையில் மகிழ்ச்சியும் திகைப்பும் எழுந்தன!
கடும்குளிர் வாட்டவும் கொடும்பசி வருத்தவும்
காரிருள் கண்டும் அஞ்சாது உடைப்பினை
அடைப்பதன் மூலம் தன் நாட்டைக் காக்கும்
அரும்பெரும் செயல்கண்டு உள்ளம் நெகிழ்ந்த
தந்தையார் குனிந்து மகன்முகம் நோக்கினார்!
"தந்தையே வழியே கடல் புகுந்திடும்!
துவாரத்தை அடைத்திட வேண்டிய அனைத்தையும்
சடிதினிங் செய்வீர்" என்றான் கான்சு!
காற்றெனத் தந்தையார் ஊருக்குள் ஓடினார்!
மக்களை எழுப்பினார்! அபாயத்தை விளக்கினார்!
மதிலின் அருகே மக்கள் குவிந்தனர்!
கட்டிடப் பொருட்களும் வந்து குவிந்தன!
துவாரம் அடைத்தனர்! அபாயம் தடுத்தனர்!
தாய் நாட்டினுக்கு நேர்ந்திட இருந்ததோர்
பாரிய அழிவைத் தடுத்த கான்சுவை
மக்கள் மெச்சினர்! போற்றிப் புகழ்ந்தனர்!
மக்கள் கான்சுவின் தியாகத்தை வியந்தனர்!!
செயற்கரிய செயல்செய்த கான்சுவைத் தந்தையார்
பெருமையும் மகிழ்வும் பொங்கிட அணைத்தார்.

கிழக்கினில் அன்றுதன் குரு பக்தியினாலுயிர்
இழக்கவும் துணிந்தான் சிறுவன் ஆருணி!
மேற்கினில் அன்றுதன் தேசபக்தினால்லுயிர்
இறக்கவும் முனைந்தான் சிறுவன் கான்சு!!
குருபக்தி யினுக்கு உதாரணம் ஆருணி!
தேசபக்கதி யினுக்கு உதாரணம் கான்சு!!

முருகு

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*இகலிற்கு எதிர்ச்சாய்தல் ஆக்கம் அதனை*
*மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# திட்டவரைபு; சில எண்ணங்கள்

இலங்கைத்தீவின் வடக்கு-கிழக்கில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஒன்றினை, சமாதானப் பேச்சு வார்த்தை மூலமான இறுதித்தீர்வு எட்டப்பட்டு அமுல்படுத்தப்படும்வரை, நிறுவுவதற்கான ஓர் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக, தமிழ் மக்கள் சார்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைக்கும் ஆலோசனைகள் உள்ளடங்கிய திட்ட வரைபானது நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு வெளியிடப் பட்டது.

புலி வருகிறது, புலி வருகிறது என்று இப்போது புலியே வெளிவந்துவிட்டது.

கடந்த சில மாதங்களாகவே, இடைக்கால நிர்வாகம் பற்றி, அது தொடர்பான யோசனைகள் உள்ளடங்கிய திட்ட வரைபின் உருவாக்கம் பற்றியும், பலராலும்,பலவகையிலும் பன்முகப்பட்ட ஊகங்களும், அபிப்பிராயங்களும் வெளியிடப்பட்டு வந்தன.

எனினும், இப்போது வெளியிடப்பட்டுள்ள திட்ட வரைபின் உள்ளடக்கமானது, ஊடகங்களுக்கு அப்பால் மிகத்தெளிவாகவும், நியாயமாகவும் ஒரு இடைக்கால நிர்வாகத்தின் அவசியத்தன்மையை வெளிப்படுத்தும் விதத்திலான அனைத்து அம்சங்களையும் கொண்டதாக இருப்பதைக் கருத்தில் கொள்ள வேண்டிய அவசியம் அனைத்துத் தரப்பினருக்கும் உண்டு.

நிலையான சமாதானத்தையும், நீதியான தீர்வினையும் வலியுறுத்தும் பிரச்சினைகளை யதார்த்தபூர்வமாக அணுக [விரு]ம்பும் அனைவரும், அனைத்து நாடுகளும் இதனை நிராக[ரி]க்கவோ, புறந்தள்ளவோ முடியாது.

இந்த நாடும், இங்கு வாழும் அமைதியை நேசிக்கும் பல தரப்பு மக்களும் இந்தத் திட்டவரைபில் குறிப்பிட்டுள்ள சகல அம்சங்களையும் நேரிய நோக்குடன் மதிப்பிடவேண்டிய கால கட்டாயமும் இப்போது ஏற்பட்டுள்ளது எனலாம்.

வழமை போன்று சமாதானத்திற்கெதிரான அமைதி முயற்சிகளை அழிக்க நினைக்கும் சக்திகள் இதனை ஆதரிக்கப் போவது கிடையாது. இந்த சக்திகள் அரசுக்குள்ளும் இருக்கலாம், எதிர்க்கட்சிக்குள்ளும் இருக்கலாம், அவற்றுக்கு அப்பாலும்கூட இருக்கலாம்.

இவர்கள் அனைவரும் சமாதான முயற்சிகளோ, நிரந்தரத் தீர்வுக்கான அரசியல் நகர்வுகளோ, தமது அரசியல் சுயநல அபிலாஷைகளை பாதித்துவிடும் என அஞ்சுபவர்களேயாவர்.

இந்தத் திட்டவரைபு வெளியானபின் தென்னிலங்கையில் அரசியற்சக்திகள் இன்னமும் முழுமையாக தமது கருத்தை உறுதியாகத் தெரிவிக்கவில்லை. ஆனாலும், முணுமுணுப்புக்கள் ஆங்காங்கே கேட்கத்தொடங்கியுள்ளன.

தென்பகுதி ஆங்கில வாரப்பத்திரிகையொன்று இந்தத் திட்டவரைபின் உள்ளடக்கம் அதிகாரப் பரவலாக்கலுக்கு அப்பால் சென்றுள்ளதென்று தலைப்பிட்டுள்ளதன் மூலம் பேரின[வா]திகளுக்குக் குழப்பத்தை ஏற்படுத்த முயன்றுள்ளது.

அரசின் ஆலோசனைகளில் இருந்து அடிப்படையில் வேறுபடும் வரைபு என்று, விடுதலைப் புலிகளின் திட்டவரைபினைக் கூறியுள்ள அமைச்சர் பீரிஸ், வழமைபோன்று இரு தரப்பினரதும் நிலைப்பாடுகளில் உள்ள வேறுபாட்டை பேசித்தீர்க்க முடியுமென்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - லண்டனில் வைத்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் இத்திட்ட வரைபினை கையளித்த ரணில் விக்கிரமசிங்க - இதற்கான மாற்றுத்திட்ட யோசனைகளை விரைவில் தருமாறும் கோரியுள்ளாராம்.

இவையனைத்தும் விபரிக்க முடியாத சில கருத்துக்களை உணர்வுபூர்வமாக உணர்த்தவே செய்கின்றன.

சிஹல உறுமய, பிக்குகள் பெரமுன போன்ற குழுக்கள் இன்னமும் தமது கருத்தை வெளிப்படையாகத் தெரிவிக்காவிடினும், அவைகளின் சமாதான முயற்சிகள் தொடர்பான நிலைப்பாடு மிகத்தெளிவான ஒன்றாக இருந்தால் அவர்கள் என்ன சொல்வார்கள் என்பதும் சந்தேகங்களுக்கப்பால் தெளிவாகவே உள்ளது.

சோஷலிச இடதுசாரிப் புரட்சியாளர்கள் என்று தம்மை வர்ணித்துக்கொள்ளும் ஜே.வி.பியினர் இத்திட்ட வரைபினை ஒரு சுதந்திரப் பிரகடன அறிக்கையெனக் கூறியுள்ளதை வைத்து அதன் நிலைப்பாட்டை விளங்கிக்கொள்ள முடியும்.

சிறிலங்காவில் இப்படியிருக்க, இந்தியாவின் சுப்பிரமணிய சுவாமி இந்த வரைபினை சிறிலங்கா அரசு ஏற்றால் அது இந்தியாவின், குறிப்பாக தமிழ் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடும் என்று தனது வழமையான அபர்த்தமான அபாய அறிவிப்பு அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளார்.

ஆனால், ஐரோப்பிய யூனியன் இதனை வரவேற்றுள்ளதுடன். ஆக்கபூர்வமான இந்த வரைபினை கவனத்தில் கொள்வதாகவும் தெரிவித்துள்ளது.

எது எப்படியானாலும், எவர் கருத்து எதுவானாலும், தமிழர்கள் விடுதலைப் புலிகளின் இத்திட்ட வரைபினை முழுமையாக ஏற்றுகொள்பவர்களாகவே உள்ளனர்.

தமிழ் உணர்வற்ற தமிழர்கள் சிலர் இதனைப் புறந்தள்ள முனையலாம். அது அவர்களின் சுயநலமாகும். அது குறித்து எவரும் அக்கறை கொள்ளப் போவதுமில்லை.

இனிவரும் நாட்களில் இது குறித்து இன்னமும் பல வட்டாரங்களிலிருந்து பல்வேறு கருத்து நிலைப்பாடுகள் தெரிய வரலாம். அதுவும் வழமையான ஒன்றாகவே இருக்கும்.

எனினும், இத்திட்டவரைபின் நியாயபூர்வமான உள்ளடக்கம் உரிய முறையில் புரிந்துகொள்ள வேண்டியவர்களால் புரிந்து கொள்ளப்படாமல் போகுமானால், ஆபத்து சமாதானத்துக்கும், சிறிலங்காவுக்கும் மட்டுமே என்பதுதான் இன்றைய அரசியல் யதார்த்தமுமாகும்.

## நாடும் நடப்பும்




# உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கு வெளிநாட்டு ஆதிக்கத்தைப் பயன்படுத்த முடியாது!

## போரூட் பிரதிநிதி போல்ஹென்றிக்

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள, வெளிநாட்டு ஆதிக்கத்தை எவராலும் பிரயோகிக்க முடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் போரூட் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி போல் ஹென்றிக் கெய்லாண்ட்.

புத்தளம் சாஹிராக் கல்லூரியில் இடம்பெற்ற இளைஞர் பாசறை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் உரையாற்றுகையில் -

யுத்த நிறுத்தத்தின் மூலம் சமாதானத்தை எட்டிவிட்டலாம் என எண்ணுவது தவறாகும். பல தியாகங்களாலேயே சமாதானத்தை அடையமுடியும்.

விட்டுக்கொடுப்புக்கள் - பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்திருக்கும் இருதரப்பாருக்குமே அவசியமானது. இதனை அழுத்தமாகத் தெரிவிக்கவேண்டியது, நோர்வே அனுசரணையாளர்களின் கடமையாகும்.

நோர்வே அரசு - இலங்கைக்கு உதவிகளை வழங்குவதன் நோக்கம் - இலங்கையில் வாழும் சகல மக்களும் சுபீட்சமாக வாழவேண்டும் என்பதற்காகவேயாகும். இந்தச் சந்தர்ப்பத்தினை அரசும், விடுதலைப் புலிகளும் நிதானமாகவும், பொறுமையாகவும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றார்.

நாளைவரை இடம்பெறவிருக்கும் இந்தப் பாசறை நிகழ்வில்- வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, பொலநறுவை முதலான மாவட்டங்களைச் சேர்ந்த மூவின இளைஞர்களுமாகச் சுமார் 450 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# 2000 இற்கும் அதிகமான தப்பியோடிய படையினர் விலகல் சான்றிதழ்களை பெறுவதற்கு விண்ணப்பம்!

(கொழும்பு)

இரண்டாயிரத்துக்கும் அதிகமான தப்பியோடிய படையினர்- விலகல் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளதாக - இராணுவப் பேச்சாளர் கேணல் தமேதபெரேரா தெரிவித்தார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஆயிரக்கணக்கான படையினரை, விலகல்சான்றிதழ் வழங்கி, சேவையிலிருந்து நீங்கியவர்களாக அறிவிக்கும் திட்டத்தை இராணுவத் தலைமையகம் செயற்படுத்திவருகிறது.

ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தப்பியோடிய படையினரைக் கொண்ட கம்பஹா மாவட்டத்தில், முதற்கட்டமாக இந்தத் திட்டம், கடந்த மாதம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

கம்பஹா மாவட்டச் செயலகத்தில் அமைக்கப்பட்ட சிறப்பு கருமபீடத்தில், இராணுவ அதிகாரிகள் - தப்பியோடிய படையினரிடம் இருந்து விலகல் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்களைப் பெற்று வருகின்றனர்.

கம்பஹா மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த விலகல் சான்றிதழ் வழங்கும் திட்டத்திற்கு, 2122 தப்பியோடிய படையினர் விலகல் சான்றிதழைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களில் 579 நிரந்தரப் படையினருக்கும், 146 தொண்டர் படையினருக்கும் - விலகல் சான்றிதழ் பெறுவதற்கு இராணுவ உயரதிகாரிகளால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் 20 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்திற்கு, கம்பஹா மாவட்டத்தில் தப்பியோடிய படையினரில் ஒரு பகுதியினர் ஆதரவளித்துள்ளனர். இவர்களில் பெண் படையினரும் அடங்குவர்.

இந்தத் திட்டம் அடுத்த கட்டமாக, களுத்துறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் கேணல் தமேத பெரேரா மேலும் தெரிவித்தார்.

# ஐ.நா. மனித உரிமை அலுவலக பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனுடன் கிளிநொச்சியில் சந்திப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் - மனித உரிமைகள் விவகாரங்களுக்கான அலுவலகப் பிரதிநிதிகள், நேற்றுமுன்தினம் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை, கிளிநொச்சியில் அமைந்துள்ள அரசியற்துறை நடுவப்பணிமனையில் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் - ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் விவகாரங்களுக்கான அலுவலகப் பிரதிநிதிகளான கரோலின் மைக் அஸ்கி, மிஜீவல் பேமியோ, ஸ்ரீபன் பிளசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பில், கரோலின் மைக் அஸ்கி தெரிவிக்கையில்- போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பில், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளையிட்டு நாம் பூரண திருப்தியடைகின்றோம். அத்துடன், போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் இடைத்தங்கல் முகாமின் முன்னேற்றத்தையிட்டும் நாம் மிகவும் மனநிறைவடைகின்றோம் என, அங்கு சென்று பார்வையிட்ட பின்னர் தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டவர்களுக்கு, தமிழ்ச்செல்வனால் விடுதலைப் புலிகளின் இடைக்காலத் திட்டவரைபின் பிரதிகளும் கையளிக்கப்பட்டன.

இந்தத் திட்டவரைபின் பிரதியைப் பெற்றுக்கொண்ட பிரதிநிதிகள்- சமாதானத்தின் முன்னேற்றத்தில் தாம் முழுத் திருப்தியடைவதாகவும், புலிகள் சமாதானப் பேச்சில் இவ்வாறு பெரியளவில் ஈடுபட்டமையையிட்டு தாம் அவர்களை உற்சாகப்ப டுத்துவதாகவும் தெரிவித்த அவர்கள், சமாதான முயற்சிக ளுக்கு, தமது பூரண ஆதரவையும் தெரிவிப்பதுடன், புலிகள் மீளவும் சமாதானப் பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர்.



# ஈராக் அமெரிக்காவுக்கு மற்றொரு வியட்னாமாக மாறுமா?





இஸ்லாமிய நாடுகளில் ஏற்பட்டுவரும் அதிருப்தியும், வன்முறைகளும் - மேற்கு நாடுகளுக்கு எதிரானதாகவே அமைந்து வருகிறது. அதிலும், குறிப்பாக அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கு எதிரானதாகவே அதிக வன்முறைத் தாக்குதல்களும், சம்பவங்களும் நிகழ்ந்துவருகின்றன. இது, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும் பெரும் தடையாக அமைந்து வருவதுடன், அமெரிக்காவின் கூட்டில் இணைந்திருக்கும் சக்திகளுக்கும் பெரும் நெருக்கடியாக மாறி வருகிறது. இத்தகைய தாக்குதல்களில் மிக அபாயமானவையாக அமைந்திருப்பது தற்கொலைத் தாக்குதல்களேயாகும். அத்தகைய தற்கொலைத் தாக்குதல்களின் அதிகரிப்புக்கள் - ஆக்கிரமிப்புச் சக்திகளின் நடவடிக்கைகளை நெருக்கடிக்குள்ளாக்கும் என்பதில் இலங்கை தமிழ் மக்களுக்கு நல்ல அனுபவம் உண்டு என்பதனை மறுத்துவிட முடியாது. இவ்வாரம் ஈராக்கில் நடந்துள்ள அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளுக்கு எதிரான தாக்குதல்கள் பற்றிப் பரிசீலிப்போம்.



ஈராக் மீதான போர் முடிந்த கையோடு, பல அரசியல் விமர்சகர்கள் போர் முடிவுக்கு வந்து விட்டதாகவும், ஈராக் போர் - அமெரிக்க பேரரசுவாதத்திற்கான ஆரம்பம் என்ற கருத்தினையும் முன்வைத்தனர். இதில் அமெரிக்க விரும்பிகள் பலர் - ஈராக் அரசியலைப் பற்றி இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பதுடன் நின்றுவிடாது, பயங்கரவாதப் பிரச்சினையாகக்கூட கையாண்டனர். இறுதியில் சதாம் ஹுசேன மீதும், அவரது ஆட்சி மீதும் திணித்த குற்றச்சாட்டுக்களும் கூட பொய்யானதென்பது அம்பலமானது. அமெரிக்கா திட்டமிட்டு சதாமை அழிப்பதன் மூலம் - எதிர்கால மேற்கின் நலன்களைப் பாதுகாக்கலாம் என்ற நோக்கத்தோடு செயற்பட்டதுடன் - தனிப்பட்ட, அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு உரித்தான போராகவும், அந்த யுத்தத்தை அமைத்ததனை விளங்கிக்கொள்ள முடியும். அவ்வாறு எல்லாம் ஏமாற்றுத்தனத்தையும், போலியையும் பிரதிபலித்த இந்தப் போரை, நியாயப்படுத்திய அரசியல் தலைமைகளும் இல்லாமலில்லை. ஆனால், இப்போது இந்தப் போர் மிக இக்கட்டான அல்லது திருப்பத்திற்குரிய கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளது.

ஈராக் மீதான ஆரம்ப நாள் போர்களிலும் - தற்கொலைத் தாக்குதல்கள் ஒன்று, இரண்டு இலக்குத்தவறி நிகழ்ந்தன. தற்போதும்கூட, இலக்கை சரிவர சென்றடைய முன்பு, தாக்குதல் நிகழ்ந்து முடிந்துள்ளது என்பதை உணர முடியும். ஆனால், ஆரம்பத்திலிருந்ததை விட, தற்போது தாக்குதலின் துல்லியம் ஓரளவேனும் சாத்தியப்படுகின்றது. இது காலப் போக்கில் சரியான துல்லியமான இலக்குகளைச் சாத்தியப்படுத்தும் தாக்குதலாக மாறும். அதற்கான அடிப்படை - தாக்கும் பிரிவுகளிடம் உண்டு என்பது சில சம்பவங்களூடாகத் தெரியவருகின்றது. குறிப்பாக, ஈராக் தலைநகரில் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் மீது நிகழ்ந்த தாக்குதலைக் குறிப்பிடலாம். அவ்வாறே அமெரிக்க நிர்வாக அமைப்பின் மீதும், பக்தாத் நகரத்தின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல் உரிய அதிகாரியைத் தவறவிட்டாலும், உரிய கட்டடத்தை இலக்குத் தவறாது தாக்கியிருந்தது. அதனைத் தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் (ICRC) அமைந்திருந்த கட்டடம் தாக்கப்பட்டது. அது கார்க்குண்டுத் தாக்குதலால் சாத்தியப்பட்டிருந்ததுடன், அதிக பாதிப்பை அமெரிக்கத் தரப்புக்கு ஏற்படுத்தியுமுள்ளது. ஈராக்கை மீளப் புனரமைக்கப் போவதாகக் கூறிக்கொண்டு, உலகநாடுகளிடமும், தொண்டு நிறுவனங்களிடமும் அமெரிக்கா உதவி கோரிவருகின்ற சந்தர்ப்பத்தில், ஈராக்கில் அடுத்தடுத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நிகழ்ந்து வருகின்றன. **ICRC** மீதான தாக்குதல்களினால் இரண்டு பணியாளர்களும், பத்து பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும், கடந்த வாரத்தின் முதல் நாளில் அமெரிக்க உயர் பாதுகாப்பு அலுவலகத்தின் மீது, ரொக்கட் தாக்குதல் ஒன்று நிகழ்ந்துள்ளது. அப்போது, அமெரிக்காவின் பிரதிப் பாதுகாப்புச் செயலாளர் **Rashid** ஹோட்டலில் தங்கியிருந்தார் என்பதும், அவரை இலக்கு வைத்தே தாக்குதல் நிகழ்ந்துள்ளது என்பதும் புலனாகின்றது. அத்தாக்குதலில் ஒரு அமெரிக்கர் கொல்லப்பட்டதுடன், 17 பொதுமக்கள் காயமடைந்தனர்.

ரொக்கட் தாக்குதல் நிகழ்ந்த அன்றைய தினமே, அமெரிக்க உலங்கு வானூர்தி ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டதும் குறிப்பிடக்கூடிய விடயமாகும். மேலும், அத்தாக்குதலில் காயமடைந்த பொதுமக்களில் ஏழு பேர், அமெரிக்கர்கள் என்பதும், நான்குபேர் இராணுவ உத்தியோகத்தர்கள் என்பதும், இருவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த ரொக்கட் தாக்குதல், சரிவர திட்டமிடப்பட்ட தாக்குதல் என்பதற்கு மேலும் பல ஆதாரங்கள் உள்ளன. அதாவது, தாக்குதல் நிகழ்ந்த கட்டடத்திலிருந்து 400 மீற்றர் தூரத்துக்குள்ளேயே நடந்திருக்கலாம் என்பதும், 29 ரொக்கட் குண்டுகள் வீசப்பட்டன என்பதும், தெரிய வந்துள்ளது.

அத்துடன், வேறு ஒரு வாகனத்திலிருந்தே தாக்குதல் நிகழ்த்தப்பட்டது என்பதையும் அமெரிக்கப் படைகள் கண்டறிந்துள்ளனர்.

ரொக்கட் தாக்குதல் நிகழ்ந்த மறுநாள், பக்தாத் நகரை அண்டியபகுதியில் நிகழ்ந்த இரு தாக்குதலில், 43 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 200 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். காவல் நிலையங்களை அண்மித்த பகுதிகளிலேயே பல தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. மொத்தத்தில் பெரும் தாக்குதல் நிறைவுபெற்றதென வெள்ளை மாளிகை அறிவித்த பின்பு, **(Mayol)** 113 அமெரிக்கப்படைகள் கொல்லப்பட்டுள்ளனர், நூற்றுக்கணக்கான படைகள் காயமடைந்துள்ளனர். உடல்ரீதியான விளைவுகளைக் காட்டிலும், உளரீதியான பாதிப்புக்களுக்கும், நெருக்கீடுகளுக்கும் அமெரிக்கப் படையினர் உள்ளாகியிருப்பதாகத் தெரியவருகின்றது.

எனவே, இத்தகைய நடவடிக்கையை பார்க்கும்போது, ஈராக் - அமெரிக்காவுக்கு மீண்டுமொரு வியட்னாமாக மாறுமா என்ற கேள்வி எழவாய்ப்புண்டு. இதற்குரிய சாதகமானதும், பாதகமானதுமான அம்சங்களை நோக்குவோம்.

ஈராக் ஒரு வியட்னாமாக மாறும் என்பதை உறுதிப்படுத்தும் தகவல்களே மேலே குறிப்பிடப்பட்டவையில் காணப்படுகின்றன. ஆனால், அவை மட்டுமல்லாது - ஈராக் மக்களதும், இதனை வழிநடத்தும் தலைமையினதும் பலத்திலும், ஆளுமையிலும் இது தங்கியுள்ளது என்பதை மறுக்கமுடியாது. வியட்நாமின் தலைமை - அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்தது மட்டுமல்லாது, வியட்நாமிய மக்களை - அமெரிக்க ஆதிக்கத்துக்கு எதிராக உருவாக்குவதிலும், அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போக்கை தோலுரித்துக் காட்டுவதிலும், மக்களிடம் தேசிய விழிப்புணர்வுமிக்க அரசியலைத் தூண்டுவதிலும் அதிக அக்கறை செலுத்தியது. மக்கள் உணர்வு பூர்வமாக மட்டுமல்லாது, அறிவுபூர்வமாகவும் ஹோசிமினின் புரட்சியை ஆதரித்தார்கள். ஹோசிமினும், அவரது போராளிகளும் - மக்களுக்காகப் போராடியது மட்டுமன்றி, மக்களைத் தேசியப் பற்றுடையவர்களாகவும், ஆக்கிரமிப்பாளர்கள் யாராக இருந்தாலும், அவர்களை எதிர்க்கும் பக்குவத்தை உடையவர்களாகவும் உருவாக்கினார்கள். இதனாலேயே, அமெரிக்க ஆக்கிரமிப்பு எதனூடாகவும் சாத்தியப்படவில்லை என்பது மட்டுமல்லாது, வெற்றிபெறமுடியாத நிலையும் வியட்நாமில் உருவானது.

அத்தகைய சூழலுக்கு ஏற்றவகையில், அன்றைய உலக அரசியலும் - வியட்நாமுக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது. பனிப்போர் என்பது கம்யூனிஸத்திற்கும், முதலாளித்துவத்திற்குமான போராக விளங்கியதால், வியட்நாமுக்கு கம்யூனிஸ நாடுகளின் ஆதரவு கிடைத்தது. போதியளவில் சீனாவும், வெளிப்படையாக இல்லாவிட்டாலும், மறைமுகமாக சோவியத்யூனியனும் - வியட்நாமுக்கு இராணுவ, பொருளாதார, ஆயுத தளபாட உதவிகளை வழங்கிவந்தன. இதனால், ஹோசிமின் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தையும், அதேநேரம் அரசியல் விழிப்புணர்வுப் போராட்டத்தையும் சமநிலையாக ஏற்படுத்திவந்தார்.

இந்தநிலை, ஈராக்கிடம் உண்டா என்பது கேள்விக்குரியது. அதற்காக வியட்நாம் போன்றுதான் ஈராக் இருக்க வேண்டும் என்பதுமல்ல. ஆனாலும், ஈராக்கின் தலைமை - சதாம் ஹுசைனிடம் தொடருவதென்பதில் ஷியா முஸ்லிம்களுக்கும், குர்திஷ் பிரிவு முஸ்லிம்களுக்கும் எந்தளவுக்கு உடன்பாடு உண்டு என்பது கேள்விக்குரியது. இவ்விரு பிரிவினரும் **அமெரிக்காவை எதிரி**யாகவே நோக்குகின்றனர். அதேயளவுக்குச் சதாமையும் நோக்குகிறார்கள் என்பது தவிர்க்கமுடியாத அம்சமாகவுள்ளது. கடந்தகால அரசியலில் சதாமின் ஆட்சியை - கறைபடிந்த ஆட்சியாகக் கருதுகின்ற ஈராக்கிய மக்கள்கூட காணப்படுகின்றனர். இதுமட்டுமன்றி, சதாமின் அணுகுமுறையால் உள்நாட்டுக்குள்ளேயே உருவாகியிருக்கும் அரசியல் எதிரிகளையும், ஏனைய பல சிக்கல்களையும் கொண்ட தலைவராகச் சதாம் விளங்குகின்றார். ஹோசிமினைப்போல வாழமுடியாத நிலையில் - அதாவது தலைமறைவான அரசியலுக்குள்ளேயே சதாமின் யதார்த்தம் அடங்கியுள்ளது.



எல்லாவற்றுக்கும் மேலாக உலக அரசியலில் சதாமிற்கு உதவக்கூடிய பட்டியலிலுள்ள அரசுகள் எவை என்பதே அடுத்த கேள்வியாகும். உலக அரசுகள் அனைத்தும் - பலமுடைய அதிகார அரசுகள் என்று கருதக்கூடியவைகள் அனைத்தும், பெருமளவுக்கு அமெரிக்கா பக்கமே சாய்ந்துள்ளன. பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா என்பன அமெரிக்க எதிர்ப்பை வெளிப்படுத்தினாலும், அதற்கு ஒரு எல்லையை வரையறுத்துள்ளநிலை காணப்படுகின்றது. அதனால், அத்தகைய அரசுகளின் அணுகுமுறை, சதாமின் ஆட்சிப்போக்கையும், போராட்ட முறையையும் ஆதரிக்க வாய்ப்பில்லை. ஏனெனில், அவ்வரசுகள் அமெரிக்கா மாதிரியான அல்லது தமது நலன் சார்பானதாகவே எந்தமுடிவையும் எடுக்க விரும்புகின்றன. அமெரிக்கா பெரும் இழப்புகளுக்கு பின்னால், ஒரு இலாபத்தையும், நலனையும் விரும்புகின்றபோது, ஏனைய நாடுகள் இழப்பீடில்லாத லாபத்தை அடைய விரும்புகின்ற உலக அரசியல், பொருளாதார, இராணுவ ஒழுங்கே தற்போது காணப்படுகின்றன. சிரியா, ஈரான், ஜோர்டான் போன்ற சிறிய அரசுகளால் - அமெரிக்க இராணுவ, பொருளாதார நிலைக்கு முன்னால் தாக்குப்பிடிக்க முடியாதுள்ளது. இதனால் ஈராக்கும், சதாமும் வெளிப்படை ஆதரவற்ற, தனித்துவிடப்பட்ட சக்திகளாகவே காணப்படுகின்றனர். சதாம் - தேச விடுதலைக்கான போராட்மெனக் கூறுவதைவிட, இழந்த நாட்டை மீட்டெடுக்க போராடுகின்ற தன்மையே அதிகம் காணப்படுகின்றது.

ஆனாலும், ஈராக்கிடம் ஒரு நம்பிக்கை இருக்கின்றது. இஸ்லாமியர்களுக்கு - குண்டுகளை உடலில் சுமக்கும் தற்கொலைத் தாக்குதல் என்பது ஒரு புதிய அத்தியாயமாகும். அதனை ஏற்கும் மனோபலம் அதிகரிக்க, அதிகரிக்க - ஆதிக்க சக்திகள் ஆட்டங்காண வேண்டியநிலை ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகும். தற்கொலைத் தாக்குதல் என்பது இலகுவானதுமல்ல. சாதாரணமான விளைவை ஏற்படுத்துமெனவும் கணக்குப்போடமுடியாது. மிகப்பலமானது. இராணுவ தளபாடத்தையும் விட, தொழில்நுட்ப பலத்தையும்விட அதிகமான விளைவை ஏற்படுத்தக் கூடியது தற்கொலைத் தாக்குதல். எனவே, அமெரிக்கர்கள் அதிர்ச்சியடைவதற்குக் காரணம் இல்லாமலில்லை.

சதாமின் தாக்குதல் பிரிவின் நோக்கங்களில் பல சாத்தியமடைந்துள்ளன. குறிப்பாக, ஐ.நா, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் - ஈராக்கை விட்டு, குறைந்தது பக்தாத்தை விட்டு வெளியேறத் தீர்மானித்துள்ளன. இது அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப் படைகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. இனி இழப்புக்களின் பெரும்பகுதி - நேரடியாகக் கூட்டுப்படைகளையே சென்றடையும்.

அடுத்தது - மக்களின் கவனம், கூட்டுப்படைகள் பக்கமல்லாது, சதாமின் படைகள் பக்கமே என்ற அடிப்படையில், மக்களை இணைத்துக் கொள்வதற்கான சாத்தியப்பாடுகளைச் சதாம் உருவாக்கலாம். அத்துடன் ஜனநாயகம் என்ற அரசியல் பொறியையும், மீள்கட்டுமானம், அபிவிருத்தி என்ற பொருளாதார பொறியையும் இலகுவில் சதாமின் படைகள் முறியடித்துவிடும். அதனைப் போலியென்று உணராத மக்களையும், உதவிகளை நாடியுள்ள மக்களையும் சதாம் வென்றுவிட சந்தர்ப்பம் உண்டு. ஈராக் படையெடுப்பு அமெரிக்காவுக்கு அதிக நன்மைகளைக் கொடுத்தாலும், அதற்காக அமெரிக்கா செலுத்தவுள்ள இழப்பீடு அபாயகரமானதாகவே அமையப்போகின்றது. சதாமின் தாக்குதல்

**கே.ரீ.கணேசலிங்கம்**

நடவடிக்கை - அதனை உடனடியாக ஏற்படுத்தாதுவிட்டாலும், ஆக்கிரமிப்புச் சக்திகளின் படையெடுப்புவாதத்திற்கு நல்லபாடமாக அமையும் என்பது தெளிவாகும். இத்தகைய அனுபவத்தை அமெரிக்கர்கள- வியட்நாமில் பெற்றபின்பு, தற்போதுதான் மீளவும் சந்தித்துள்ளனர். எனவே, ஏனைய ஆக்கிரமிப்பு எண்ணங்கொண்ட சக்திகளுக்கு முன்னனுபவமாக அமைவதுடன், விடுதலைப் போராட்டங்களை நிகழ்த்துகின்ற இனங்களுக்கு நம்பிக்கையூட்டும் வலுவையும் இது கொடுக்கக்கூடியதே!

# 'சினூக்' அமெரிக்க ராட்சத ஹெலி பலூஜாவில் சுட்டு வீழ்த்தப்பட்டது!

## 15 படையினர் பலி; 21 பேர் படுகாயம்

(பக்தாத்)

அமெரிக்க ஹெலிகொப்ரர் மீது ஈராக்கின் பலூஜா நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் அது வீழ்ந்து நொருங்கியதுடன், அதில் பயணம்செய்த 15 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர். மேலும் 21 படையினர் காயமடைந்ததாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் கேணல் வில்லியம் டார்லி தெரிவித்தார்.

அமெரிக்க இராணுவத் தளம் ஒன்றில் இருந்து 60 படையினரை ஏற்றிக்கொண்டு, இரட்டைக் காற்றாடி 'சினூக்' துருப்புக்காவி ஹெலிகொப்ரர் - பக்தாத் சர்வதேச விமான நிலையத்தை நோக்கி பறந்துகொண்டிருந்தபோது, நேற்றுக்காலை 9 மணியளவில் அதன் மீது இரண்டு விமான எதிர்ப்பு ஏவுகணைகள் ஏவப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தாக்குதலுக்குள்ளான ஹெலி பாக்தாத்திற்கு மேற்கே 50 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பலூஜா நகரின் ஹாசி கிராமத்திலுள்ள சோள வயலில் வீழ்ந்து முற்றாக அழிந்தது. இதில் பயணம் செய்த 15 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர். மேலும் 21 பேர் காயமுற்றனர்.

வீழ்ந்து எரிந்துகொண்டிருந்த ஹெலியில் இருந்து கொல்லப்பட்ட படையினரின் சடலங்களையும், காயமடைந்த படையினரையும் அமெரிக்கத் துருப்புக்கள் மீட்டெடுத்ததை தொலைக்காட்சிகள் காண்பித்தன.

கடந்த ஏப்ரல் மாதம் சதாம் ஹுசைன் பதவியில் இருந்து அகற்றப்பட்ட பின்னர், நடத்தப்பட்ட தாக்குதலில் ஆகக் கூடுதலான அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்ட சம்பவம் இதுவாகும்.

ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டதையடுத்து, பலூஜா நகரவாசிகள் வெடிகொழுத்தி, மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததாக - அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

சுட்டு வீழ்த்தப்பட்ட சினூக் ரக ஹெலிகொப்ரர்களை இயக்குவதற்கு நான்கு விமானிகள் தேவை. இது துருப்புக்களை கொண்டு செல்வதற்கும் ஆட்லறிகளை இடம் நகர்த்துவதற்கும் பயன்படுத்தப்படுவது வழக்கமாகும்.

கடந்த ஒன்பது நாட்களுக்குள் ஈராக்கில் சுட்டு வீழ்த்தப்பட்ட இரண்டாவது அமெரிக்க ஹெலிகொப்ரர் இதுவாகும்.

இதேவேளை, பலூஜா நகரில் நேற்றுக்காலை அமெரிக்க இராணுவ வாகனத் தொடரணி ஒன்றின் மீது நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் ஒரு அமெரிக்கப் படைவீரர் கொல்லப்பட்டதோடு, நான்கு அமெரிக்கப் படையினர் காயமுற்றனர்.

கடந்த மே முதலாம் திகதிக்கு பின்னர் ஈராக்கில் இதுவரை நடத்தப்பட்ட தாக்குதல்களில் 136 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

உலக நோக்கு





நேற்றுப் பலூஜா நகரில் சுட்டுவீழ்த்தப்பட்ட அமெரிக்க சினூக் ரக ஹெலிகொப்ரரைப் படத்தில் காணலாம்.

# பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட...

அவர்களுடைய அரசியல் அபிலாஷைகளை நோக்கிய பயணம் என்பது தொடர்பாக எப்போதும் உறுதியாக இருக்கிறோம்.

**இடைக்கால நிர்வாகத்திற்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான உறவு எவ்வாறானதாக இருக்கும்?**

இடைக்கால நிர்வாகத்திற்கு இராணுவத்தினரின் உறவு அவசியமென நான் கருதவில்லை. ஏனெனில், யுத்தம் நடக்கும் போதுதான் இராணுவத்தினுடைய தலையீடுகள், உறவுகள் சம்பந்தமாக தீர்மானிக்கவேண்டும். இயல்புநிலையை தோற்றுவித்து, மக்கள் தமது சொந்த நிலங்களிலே வாழும்நிலை ஏற்படும் போது, அங்கு இராணுவம் தனது அதிகாரத்தை பிரயோகிக்கவேண்டியதேவை ஒருபோதும் இருக்காது. ஏனெனில், இராணுவ ஆட்சியின் போதுதான் இராணுவத்தின் உறவு பற்றி நாம் சிந்திக்கலாம்.

வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகப் பிரதேசத்திலே வாழும் மக்கள், தமது வாழ்வு நிலைகளை உறுதிப்படுத்தி ஒழுங்கமைப்பதற்கான ஒரு கட்டமைப்பாக உள்ளபடியால், இதில் இராணுவத்தினரின் உறவுபற்றி நாம் பேசுவது பொருத்தமற்றது என்றே நினைக்கிறேன்.

**நீங்கள் ஏன் ஒரு தேர்தலை சந்திக்க முடியாது?**

ஐந்து வருடங்களுக்குப் பின்னால், அரசியல் தீர்வு தொடர்பான விடயங்களில் நாம் முழுமையடையாதுவிட்டால், ஜனநாயகவழியில் ஒரு தேர்தலை நடாத்தவேண்டியது அவசியம். அதனை நாம் வரைபிலே தெளிவாக குறிப்பிட்டுள்ளோம்.

**அரசு மீதான தங்கள் நம்பிக்கை தற்போது எவ்வாறு இருக்கிறது?**

நாங்கள் தனியே ஐக்கிய தேசிய கட்சியோடு உள்ள உறவுபற்றி சொல்லமுடியாது. எங்களைப் பொறுத்தவரையில் அரசு துணிவோடு இந்த சமாதான முயற்சிகளில் ஈடுபட முனைந்தார்கள். ஆனால், தொடர்ச்சியாக நடைபெற்ற சில நிகழ்வுகளால் அவர்களுடைய துணிச்சலும், முற்போக்கான நடவடிக்கைகளும் தொய்வடைந்துள்ளன.

**இராணுவத்தினரின் தொடர்பு தேவையில்லை என்பதுபோல, விடுதலைப்புலிகளும் தமது ஆயுதங்களை கைவிடுவார்களா?**

நான் நினைக்கிறேன் இரண்டு தரப்பிலும் உள்ள இராணுவம் இடைக்கால நிர்வாக தீர்வில் சம்பந்தப்படவேண்டிய தேவை இல்லை. விடுதலைப் புலிகள் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் தமது படைமுகாம்களையோ, காவலரண்களையோ அமைத்து வைத்திருக்கவில்லை. விடுதலைப்புலிகள் தமிழமக்களுடைய இராணுவம். இன்றைய சமாதான சூழலை நன்குணர்ந்து மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ வழிஏற்படுத்தி, தம்மை ஒரு புறம்போக்கான இடத்திற்கு எமது இராணுவத்தை நகர்த்தியிருக்கிறோம். அதேபோல, இலங்கை இராணுவமும் செய்யுமாக இருந்தால் இயல்பு நிலையையும் சமூக நிலையையும் உருவாக்குவது இலகுவாக இருக்கும். எனவே, இந்த உரையில் இருபகுதி இராணுவத்தினரையும் தொடர்புபடுத்துவது என்பது அவசியமற்றதாகும்.

**இராணுவ நிலைகளில் மாற்றம் ஏற்படுமா?**

இராணுவநிலைகளில் மாற்றம் இல்லாவிட்டால், இயல்பு வாழ்க்கை ஏற்படாது. இது முககியமான விடயமாகும். எனவே, இடைக்கால நிர்வாகத் திட்டவரைபில் - இயல்பு வாழ்க்கையைக் கொண்டுவருவதற்காக நாம் அந்த மாற்றங்களை சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

**இலங்கையின் இறையாண்மைக்குள் வரும் நிர்வாக அமைப்பை ஏற்றுக்கொள்கிறீர்களா? அல்லது தமிழீழம் என்ற நோக்கத்தின் முதற்படியாக இதனை ஏற்படுத்தியுள்ளீர்களா?**

ஆலோசனை உரையை வடிவாக ஆராய்ந்தால், இந்த வினாவுக்குரிய விடை கிடைக்கும். ஈழம் என்ற கோரிக்கையை நாம் முன்னெடுத்துச்செல்வதாகஇருந்தால், பேச்சுவார்த்தைக்கு வந்திருக்கவேண்டிய அவசியம் இல்லை.

எங்களைப் பொறுத்த வரையில், வடக்கு-கிழக்கில் வாழும் மக்களின் பிரச்சனைக்கு ஒரு உறுதியான தீர்வை ஏற்படுத்துவதற்கான முயற்சியிலே ஈடுபட்டுள்ளோம். அந்த அடிப்படையில் இறுதியான ஒரு அரசியல் தீர்வை எட்ட நீண்டகாலம் எடுக்கும். எனவே, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று ஏற்படுவது அவசியம் என்பதால், ஒரு முன்மொழிவை முன்வைத்துள்ளோம்.

இது இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு ஆலோசனையே தவிர, ஈழம் என்பதற்கான முதற்படி அல்ல. இதற்குத் தவறான வடிவம் கொடுப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

ஈழம் என்பதைக் கைவிடும் அதிகாரம் எமக்குக் கிடையாது. ஏனெனில், 1977 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கிலே வாழும் பெரும்பான்மையான மக்கள் - அனைத்து சமாதான ஜனநாயக வழிமுறைகள் ஊடாகவும் தாம் அடைய நினைத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்ற நிலையில்தான், தமிழ்மக்கள் ஒட்டுமொத்தமாக அந்த நிலைப்பாட்டை எடுத்தார்கள். தமிழீழத்துக்கான ஆணையை தமிழ் மக்கள்தான் பிறப்பித்தார்கள். அதனைத்தான் விடுதலைப் புலிகள் முன்னெடுத்து, தொடர்ந்தும் அதற்காகவே போராடிவந்தார்கள். தற்போது அமைதிவழியில், சமாதான வழியில் ஒரு மாற்றுத்தீர்வை பரிசீலிக்கலாமென இலங்கை அரசும், சர்வதேசமும் விரும்பிய காரணத்தால் அதற்கு நாம் முன்வந்துள்ளோம்.

ஆனால், வரப்போகும் அந்த மாற்றுத் தீர்வு தமிழ்மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்குமா என்பதைப் பொறுத்தே, நாம் இந்த விடயம் தொடர்பாக முடிவுகூறமுடியும். வெளிப்படையாக மாற்றுத் தீர்வொன்றை பரிசீலிப்பதற்காக பல தடவைகள் எமது விருப்பத்தை தெரிவித்துள்ளோம். பேச்சுவார்த்தைகளிலும் அதற்கான இணக்கப்பாட்டை எட்டியுள்ளோம். எனவே, இந்த நிலையில் தனித் தமிழீழம் பற்றி கதைத்து - ஒரு குழப்பமான நிலையை ஏற்படுத்த நான் விரும்பவில்லை. அது தொடர்பான கருத்துக்களை முன்வைக்கும் சூழலும் தற்போது இல்லை.

**சமாதான முயற்சியை சர்வதேச சமூகமும் அரசாங்கமும் ஏற்றுக்கொண்டாலும்- ஜனாதிபதி நாட்டின் தலைவி என்றமுறையிலும், எதிர்க்கட்சிகளும் இந்தத் தீர்வை ஏற்கமறுத்தால் உங்கள் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?**

எங்களைப் பொறுத்தவரை நாங்கள் நியாயபூர்வமான, ஆக்கபூர்வமான, நடைமுறைச் சாத்தியமான ஒரு ஆலோசனையை வழங்கியுள்ளோம். அதனை யார்யார் எதிர்ப்பார்கள், என்ன விளைவுகள் ஏற்படுமென்றெல்லாம் நாம் பார்க்க முடியாது. நாம் எமது மக்கள்சார்பாக ஓர் ஆலோசனையை முன்வைத்துள்ளோம். இனி மேல் தென்னிலங்கையில் ஏற்படுகின்ற முரண்பாடுகள், சர்ச்சைகள், எதிர்ப்புக்களை துணிச்சலோடு முகம்கொடுத்து இன்றுள்ள அரசாங்கம் ஒரு தீர்வைக் கொண்டுவரவேண்டும்.

**விடுதலைப்புலிகளின் இடைக்கால வரைபில் இருந்து, நாங்கள் கொடுத்துள்ள வரைபில் வித்தியாசம் இருக்கலாம். அப்படி இருப்பின் அது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று அரசு கூறுகிறது. அப்படியொரு பேச்சுவார்த்தை நடத்தவேண்டி ஏற்பட்டு, இருதரப்புக்கிடையிலே ஒரு ஒழுங்கு செய்வதற்கு நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா?**

நிச்சயமாக. நாங்கள் ஒரு ஆலோசனை வரைபினை சமர்ப்பித்துள்ளோம். இது தொடர்பாக இருதரப்பும் பேசி இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்வதென்பது அவசியம். அது கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படும்.

**இடைக்கால வரைபிலே சில குறிப்புகள் இடப்பட்ட விஷயங்கள் வடக்கு - கிழக்கிலே உள்ள கனிமங்கள், உற்பத்திகள், , பொருட்கள் தொடர்பாக தெற்குடனான உறவுகள் எப்படி இருக்கும்?**

இது சம்பந்தமாக இருதரப்பும் பேசி, நடைமுறைச்சாத்தியமான விடயங்களை நடைமுறைப்படுத்தி, ஒழுங்குபடுத்திக்கொள்வதன் ஊடாக ஏற்படுத்திக்கொள்ளலாம். வரைபில் இதனுடைய அதிகாரங்கள், தேவைகளை சுருக்கமாக நாம் வலியுறுத்தியிருக்கின்றோம். இதுவொரு ஆலோசனை வரைபு. அடுத்த கட்டமாக தீர்மானங்களை இரண்டு தரப்பும் பேசித் தீர்மானிக்கலாம்.

**ஜனாதிபதி நோர்வே அரசிடம் கேட்டுக் கொண்டது தொடர்பாக ஜனாதிபதியின் கருத்து ஒனறாகவும், அரசின் கருத்து ஒன்றாகவும் இருக்கின்றது. இந்த சமாதான ஒப்பந்தத்தின் மூலம் தான் கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட்டது. இந்தக் கருத்து வேறுபாடுகளும், நோர்வே அரசு ஏன் இந்தக் கண்காணிப்புக்குழுவை இங்கு அனுப்ப நேரிட்டது என்ற கேள்வியெழும் சூழ்நிலையிலும் யுத்தநிறுத்த ஒப்பந்தமே கேள்விக் குறியாகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமென நீங்கள் அஞ்சுகின்றீர்களா?**

எங்களைப் பொறுத்தவரை ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையேயான முரண்பாடுகள், நெருக்கடி நிலைமைகள் இன்று நேற்று வந்தது அல்ல. இது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்பு தொடர்ச்சியாக வந்த வண்ணம் இருக்கின்றது. அதனுடைய உச்ச நிலையாகத்தான் நாங்கள் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற சர்ச்சையைப் பார்க்கின்றோம். இந்த சமாதான முன்னெடுப்புக்களை, சமாதான சூழ்நிலையை சீர்குலைக்கின்றவர்கள் - அதற்கான விளைவை அவர்கள் பெற்றுக்கொள்வார்கள். சமாதானம், அமைதி, ஒரு சுமுகமான வாழ்வை அனைத்து மக்களும் அதனை எதிர்பார்த்து நிற்கின்றார்கள். சர்வதேச சமூகமும் எதிர்பார்த்து நிற்கின்றது. அந்த வகையில் இந்த சமாதான சூழ்நிலையை சீர்குலைக்க முயல்பவர்கள் இவற்றுக்கெல்லாம் பதில்சொல்லி, இதனுடைய விளைவுகளையும் எதிரநோக்க வேண்டிவரும். இது சம்பந்தமாக விரிவான கேள்விகளை நீங்கள் ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் கேட்கவேண்டுமே தவிர, எங்களிடம் கேட்பது பொருத்தமில்லை.

**இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இரு தரப்பில் ஒரு தரப்பு நீங்கள். இது ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலுள்ள பிணக்கு என்றும், அவர்கள் இரண்டு பேரும் சேர்ந்தே இலங்கை மக்களுக்கு எது நன்மை, எது தீமை என்பதைத் தீர்மானிக்கவேண்டியது அவர்களைப் பொறுத்தது. ஒப்பந்தத்தில் கையெழுத்து வைத்தவர்கள் என்ற வகையில் அந்த ஒப்பந்தத்தின் ஒரு அம்சமாக இருக்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு சம்பந்தமான வேறொரு முடிவை, வேறுவிதமாக அவர்கள் எடுக்கும்போது, உங்கள் தரப்பினது உணர்வலைகள் என்ன?**

நோர்வேத் தரப்பும், சர்வதேச சமூகமும் இது தொடர்பாக ஆராயும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும்போது, நாம் இது தொடர்பாக முரண்பாடான கருத்துக்களை முன்வைத்து, மேலும் சர்ச்சையாக்க விரும்பவில்லை. எம்மைப் பொறுத்தவரையில் சமாதான முயற்சிகளில் ஜனாதிபதியின் நடவடிக்கை - மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான தீர்வு முயற்சிகளுக்கு ஒரு தடையானதாகவே நாம் பார்க்கின்றோம். இதற்குமேல் அது சம்பந்தமாக மேலதிக கருத்துக்களை தற்போதுள்ள சூழ்நிலையில் தெரிவிக்கவிரும்பவில்லை.

**கண்காணிப்புக்குழுவினர் கப்பல்தொடர்பான தகவலை, விடுதலைப் புலிகளுக்கு முன்னதாகவே தெரிவித்துவிட்டார்கள் என்று கூறப்படுவது பற்றிய உங்கள் கருத்து?**

இந்தக் குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை. அவர்களால் வேண்டுமென்றே ஜோடிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட கதையாகத்தான் நாம் பார்க்கிறோம். இந்தக் குற்றச்சாட்டில் எந்தவித உண்மையும் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை.

**எல்லாம் பேசித் தீர்த்த பின் கிளிநொச்சியில் இருக்கும் இராசையாவும், மாத்தறையில் இருக்கும் அப்புகாமியும் இலங்கையின் பிரஜைகள் என்றும், சகோதரர்கள் என்றரீதியிலும நடந்து கொள்வது சாத்தியமாக இருக்குமா?**

பேசி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படின் - நாமும், சிங்கள மக்களும், இந்நாட்டில் வாழும் அனைத்து மக்களும் சமாதானமாக, சகோதரர்களாக வாழலாம். இது எதிர்காலத்தில் ஏற்படுகின்ற வெற்றிகள், உறுதிப்பாடுகள், சூழ்நிலைகளின் அடிப்படையில்தான் உங்களது கேள்விக்கான பதில் யதார்த்தமாக வரவேண்டும்.

**இலங்கை அரசியல் அமைப்புக்கு உட்பட்டதாக தீர்வு யோசனைகளை முன்வைக்க முடியாது என்று தெரிந்துகொண்டா, இந்தத் தீர்வு யோசனையை முன்வைத்துள்ளீர்களா? அல்லது தெரியாத நிலையில்தான் இந்த தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டதா?**

நீங்கள் தெரிந்துகொண்டு, வேண்டுமென்று தெரிவிக்கின்ற கருத்துக்களுக்கு அப்பால், தமிழ் மக்களின் நீண்டகால வரலாற்று உரிமைப் போராட்டம், அவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றங்கள், அவர்களுடைய தேசத்தில் அவர்கள் மிகவும் அவமானப்படுத்தப்பட்டது, பழிவாங்கப்பட்டது போன்ற வரலாற்றுத்தொடர் ஒன்று உள்ளது. இந்த அடிப்படையில் மக்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்யக்கூடிய வகையில், ஒடுக்குமுறைக்குட்பட்ட இனத்துக்கு ஒடுக்கப்பட்டவர்களால் உரிமைகள் வழங்கப்படுவது அவசியமாகும்.

**தமிழ்தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து வேலைசெய்கின்றார்கள். இந்த நிலையில் இடைக்கால நிர்வாகம் உருவாகினால் அவர்களது நிலைபற்றி என்ன கூறுகிறீர்கள்?**

தமிழ்க் கூட்டமைப்பு தமிழ்மக்களின் பிரதிநிதிகள். தமிழ் மக்கள் பிரதிநிதிகள் எல்லோரும் ஒன்றிணைந்து ஒரு கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையில் எங்களுடைய பணிகளை ஆற்றிவருகிறோம். அந்த வகையில், அவர்கள் முன்வைக்காத கோரிக்கையை நீங்கள் முன்வைப்பது எமக்குப் புரியவில்லை நாங்கள் இது தொடர்பாக அவர்களுடன் பேசுவோம்.

❖❖❖

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பாதுகாப்பு அமைச்சைக் கையேற்று சமாதான சூழலைக் குழப்பவேண்டாம்!

## ஜனாதிபதிக்கு மகாநாயக்கர்ஆலோசனை

சமாதானம் கனிந்து வரும் சூழலில் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப பேற்க ஜனாதிபதி முயற்சிப்பது மாண்பற்ற செயலாகும்.

இவ்வாறு - மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் அதிவணக்கத்திற்குரிய ரம்புக்வெலவிபஸி தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று விடுத்த விசேட அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தற்சமயம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையிட்டு சர்வதேச சமுகம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனாதிபதி ஆதரவு வழங்கவேண்டுமேயொழிய, அதற்குத் தடைகளை ஏற்படுத்தக் கூடாது. அவ்வாறு தடைகளை ஏற்படுத்துவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

விடுதலைப் புலிகளின் பிரேரணைகள் நாட்டின் நலனுக்குப் பாதகமாக உள்ளனவா? என்பதைத் தீர்மானிப்பதற்கு பேச்சுவார்த்தைகளை நடத்த முடியும்.

அதேவேளை - கல்விமான்களும், மதத்தலைவர்களும்கூட இந்தப் பிரேரணைகளுக்கு திருத்தங்களை அறிவிக்க முடியும்.

நாட்டின் நலன்கருதி சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் விதத்திலும் ஜனாதிபதிக்கு இந்த வேண்டுகோளை விடுக்கிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் கருத்து வெளியிடுகையில், மிக முக்கியமான இந்தக் காலகட்டத்தில் - நாட்டினதும், நாட்டு மக்களினதும் நன்மை கருதி ஜனாதிபதி பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

(01)

## நாற்சந்தி

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான விடுதலைப் புலிகளின் திட்டவரைபு அரசிடம் கையளிக்கப்பட்டுவிட்டது.

ரணிலிடம் இத்திட்டவரைபு கிடைத்தபோது, அவர் லண்டனில் இருந்தார், அங்கிருந்து அவர் அமெரிக்கா சென்று, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் புஷ்ஷை சந்திக்கப்போகிறார். அங்கு அவர் நிச்சயமாக இத்திட்ட வரைபு குறித்து ஜனாதிபதியுடனும், அமெரிக்க அதிகாரிகளுடனும் கலந்தாலோசனை செய்வார் என்பது நிச்சயம். அவர் அதை மறுத்தாலும் அது நடக்கவே செய்யும்.

இதேவேளை - ஜனாதிபதி சந்திரிகாவோ வழமைபோன்று இந்தியா சென்று இந்தியத் தலைவர்களுடன் இத்திட்டவரைபு குறித்து ஆராய அடுத்த வார இறுதியில் புதுடில்லி செல்லவுள்ளாராம்....

ஆனால், இது குறித்து பிரதமரும், ஜனாதிபதியும் பரஸ்பரம் கருத்துக் கலக்காது அயல்நாட்டுக்கும் அந்நிய நாட்டுக்கும் ஆலோசனை கேட்கச் செல்வதுதான் சிறிலங்காவின் இரட்டை ஆட்சியாளர்களினது பரிதாபத்துக்குரிய பலவீனம்....!

என்ன செய்வது சுய புத்தியில் செயற்படும் திறன் அவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

தனது சொந்தப்பிரச்சினைக்கு, தனது சொந்த அபிலாஷைகளுக்கேற்ப ஒரு தீர்வை நடைமுறைப்படுத்துமாறு ஆலோசனை கூறக்கூடிய அயலவரை அல்லது அந்நியரை கருத்துக் கேட்பது எவ்வளவு அபத்தமானது என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை....

'கெடுகுடி சொற்கேளாது.... அதற்கு நாமென்ன செய்யமுடியும்?' என்றார் பேப்பர் கடை பெரிய சாமியார்....

தெருவாசி

## பெர்னாண்டோபுள்ளே விலகினார்!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கட்டான தொகுதியின் சுதந்திரகட்சி அமைப்பாளர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

அண்மைக்காலமாக கட்சியின் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கிச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் அவர் தனது இராஜினாமாக்கடிதத்தினை பதிவுத்தபாலில் கட்சியின் பொதுச்செயலாளருக்கும் அனுப்பிவைத்துள்ளதாக ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

## நம்பிக்கைத் தீர்மானம்...

இந்தநிகழ்வில், கூட்டணியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

பிரார்த்தனையைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் பிரார்த்தனை நடத்தவேண்டியதன் அவசியம் குறித்தும், கட்சியின் நிலைப்பாடுகள் குறித்தும் உரைநிகழ்த்தினார்.

இந்தவேளையில், எதிர்பாராத விதமாக அங்கு பிரசன்னமாகிய கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி, நிகழ்வில் உரைநிகழ்த்துவதற்கு ஏற்பாட்டாளரிடம் அனுமதி கோரி, உரைநிகழ்த்தினார்.

சுமார் இரண்டு மணிநேரமாக அங்கு உரையாற்றிய சங்கரி - கட்சியின் உட்பூசல், தமிழரசுக்கட்சியின் மீள்உருவாக்கம் பற்றியெல்லாம் விமர்சித்தார். தொடர்ந்து கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை வன்மையாகச் சாடிய அவர் - நெருக்கடியான காலகட்டங்களில் கட்சிக்கு உதவ மறுத்தவர்களும், சந்தர்ப்பவாதிகளுமே தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து தமிழரசுக்கு கட்சியை உருவாக்க முற்படுவதாக குற்றஞ்சாட்டினார்.

குடாநாட்டில் பரவலாக விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் பிறரால் நிர்ப்பந்திக்கப்பட்டோ, அல்லது திணிக்கப்பட்டதாலோ வெளியிடப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பதவியை வகிக்கும் தனக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை - மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்ட அலுவலகங்கள் கொண்டு வந்துள்ளதாகவும், அதனைக் கண்டித்து தம்மீதான நம்பிக்கைத் தீர்மானத்தினை கொண்டுவரவேண்டும் எனவும் அவர் அங்கு கோரிக்கை விடுத்தார்.

ஆனந்தசங்கரியின் உரையை இடைநிறுத்தி உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கட்சியின் தலைமைகளுக்கு இடையிலுள்ள முரண்பாடுகளை நீக்கி, ஒற்றுமையை வலியுறுத்துவது தொடர்பாகவே இந்தப் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தப்படுகிறது என்றும், எவருக்கும் ஆதரவாகவோ அல்லது எதிராகவோ கண்டனத்தீர்மானங்கள் நிறைவேற்ற நடத்தப்படவில்லையெனவும் ஆவேசமாகத் தெரிவித்தார்.

இதனையடுத்து சங்கரிக்கும், ரவிராஜ்ஜுக்கும் இடையில் கடும் வாக்குவாதங்கள் ஏற்பட்டன. கட்சியின் உள்ளூர் தலைவர்களும், ஆதரவாளர்களும் குறுக்கிட்டுத் தமது கடும் ஆட்சேபனையையும், எதிர்ப்பினையும் தெரிவித்து, கூட்டத்தை விட்டு வெளியேறிச் சென்றனர்.

கூட்டணிக்கு இடையில் ஒற்றுமையை உருவாக்க, மத்தியகுழு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளை கைவிடப்படல் வேண்டுமென்ற முடிவுகளை, நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கொண்டுவந்த பிரேரணையை கட்சி உறுப்பினர்கள் ஆதரித்தனர்.

ஆனந்தசங்கரி கொண்டுவந்த தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளியேறிக்கொண்டிருந்த ஆதரவாளர்களைப் படம்பிடிக்க முயன்ற ஊடகவியலாளரை, சங்கரியின் உறவினர் ஒருவர் தடுத்து நிறுத்தினார். இதற்கு ஊடகவியலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தம்மீது நம்பிக்கைத் தீர்மானத்தினைக் கொண்டுவரும் ஆனந்தசங்கரியின் முயற்சி - கட்சி ஆதரவாளர்கள் வெளியேறியதைத் தொடர்ந்து படுதோல்வி அடைந்தது.

ஆனந்தசங்கரியின் வருகையையொட்டி கூட்டணி அலுவலக பகுதியைச்சுற்றி இராணுவத்தினரும், பொலிஸாரும் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர். (111,202)

## ரவூப் ஹக்கீம் குழுவினர் இன்று நாடு திரும்புவர்!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மற்றும் அவரது அரசியல் ஆராய்வுக் குழுவினரும் இன்று இலங்கைக்கு திரும்பவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம் மக்களுக்கான அபிலாசைகளை வெளிப்படுத்தும் வகையிலான தீர்வு யோசனைகள் பற்றி ஆராயும் பொருட்டு பிரித்தானியா சென்ற இவர்கள், ஸ்கொட்லாந்து, லண்டன் முதலான இடங்களுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமை தெரிந்ததே.

## மாணவர்கள்....

பட்ட இந்தக் கருத்தரங்கு, மாணவர் தொகை கூடியதனால் இரு அமர்வுகளாக நடத்தப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் மாணவர்களுக்கு முன்னோடிப்பரீட்சை வினாத்தாள்கள் வழங்கப்பட்டு, பரீட்சையும் நடத்தப்பட்டது.

ஒரு தொகுதி மாணவர்களுக்கு கருத்தரங்கு நடைபெற்றபோது, மற்றைய தொகுதி மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற இந்த முன்னோடிப் பரீட்சை வினாத்தாள், விடைகளுடன் நாளை மறுதினம் நமது ஈழநாட்டில் வெளியிடப்படும்.

## தலைமைப்....

பதவியிலிருந்து ஆனந்தசங்கரி, உடன் விலகவேண்டும், இல்லையேல கட்சியிலிருந்து அவரை விலக்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கையெடுக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் ஐந்நூறுககும் அதிகமான கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக்காலத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக கருத்துக்களை தெரிவித்துவருகின்றார். இதனால், கட்சிக்குள் நெருக்கடி உருவாகியிருப்பதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அம்பாறைக் கிளை அறிவித்துள்ளது.

## கூட்டணியை.....

இருக்குமாறுகோரி வருகின்றார்கள்.

நான் புலிகளை ஆதரிக்காதவன் அல்ல. விடுதலைப் புலிகளுடன் தான அரசு பேசவேண்டும், தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படுதல் வேண்டும், தமிழர் பாரம்பரியம் மதிக்கப்படல் வேண்டும் என்பதில் உறுதியாகவே உள்ளேன்.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள்தான். தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதையோ அல்லது அத்தகைய கருத்துக்களைக் கூறிக் கொண்டுதான் நாம் தேர்தலில் வெற்றி பெற்றோம் எனக்கூறுவதை நான் ஒருபோதுமே ஏற்கமாட்டேன்.

இடைக்கால நிர்வாகம் வழங்கப் படுவதும், வழங்காமல் விடுவதும் அரசின் தீர்மானம். அதில் , நான் தலையிட முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புலிகளின் வரைபு குறித்து ஆராய்வர்!

## முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுயோசனை குறித்து அமைச்சர் றவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு விரைவில் ஆராயவுள்ளது.

இத்தகவலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நேற்று வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இன்று நாடு திரும்பும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் விரைவில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தை ஒழுங்கு செய்து நடாத்தவுள்ளார்.

இதில், விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுயோசனையில் முஸ்லிம்களின் உரிமைகள் மற்றும் சாதக, பாதக விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன.

இந்த விடயங்கள் குறித்து, இம்மாத நடுப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஸனுடன் கலந்தாலோசிக்கவுள்ளார்.

இதேவேளை, முன்னாள் சட்டமா அதிபர் சிப்லி அஸீஸ், கலாநிதி ஜெயம்பதி விக்கிரமரட்ண, மற்றும் பரீத் சபறுல்லா முதலியோருடனும் இது குறித்து ஆலோசனை நடாத்தவுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு - கிழக்கைப் பிரிக்கவேண்டும் சிஹல உறுமய ஜனாதிபதியை கோருகிறது!

வடக்கு, கிழக்கின் தற்காலிக இணைப்பினை ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் ரத்துச்செய்ய வேண்டுமென சிஹல உறுமய கேட்டுள்ளது.

இந்த இணைப்பை இரத்துச் செய்வதன் முலமே விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள தமிழீழ பரிந்துரையை தோற்கடிக்க முடியுமெனவும், அந்தக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

காவல்துறை, வரி போன்ற பல கோரிக்கைகளுடன் முன்வைக்கப்பட்டுள்ள புலிகளின் திட்டவரைபு தொடர்பாக அரசு அவர்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தக்கூடாது. எனவே, இவ்வாறான பேச்சிலிருந்து அரசு விலகிக்கொள்ள வேண்டும். அத்துடன் இந்தத்திட்டம் தொடர்பாக அரசு கொண்டிருக்கும் நிலைப்பாட்டையும் அது பகிரங்கமாக வெளியிட வேண்டும் எனவும், சிஹல உறுமய தெரிவித்துள்ளது.

இதனிடையே புலிகளின் திட்டவரைபில் வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தேசியஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

(01)

## புலிகள்....

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

ஒஸ்லோ மாநாட்டில் முன்வைக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையிலேயே இந்தயோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வித நிகழ்வொன்று முதல் தடைவையாக இடம்பெற்றிருப்பது வரவேற்கத்தக்கதாகும்

எல்லோரது கவனத்தையும் ஈர்க்கவேண்டியதொரு அம்சமாகவும் இதுகருதப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தை இழப்பதென்பது, நாட்டிற்கு உகந்ததொன்றாக அமையாது. எனவே, நாட்டின் அரசியல் தலைவர்கள் அனைவரும் இணைந்து நாட்டின் தேசியபிரச்சினைக்குத் தீர்வுகாண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விடுதலைப்.....

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நேற்றிரவு புலிகளின் திட்ட வரைபு குறித்து விரிவாக ஆராய்ந்ததுடன் உத்தியோகபூர்வ அறிக்கையொன்றை இன்று வெளியிடுவதாகவும் தீர்மானித்தனர்.

இந்தக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ, லக்ஸ்மன் கதிர்காமர், மனோ திக்வெல, ஹரீம் பீரிஸ் ஆகியோர் பங்கேற்றனர்.

இதனிடையே -

இந்தத் திட்டவரைபை அடிப்படையாகக்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க. அரசை விரைவில் கவிழ்க்கும் முயற்சிகளில் ஈடுபட ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ் நகரில்
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்..!!!!!
1.பழுதடைந்த பழைய படங்களை நவீன முறையில் புதுப்பித்து மெருகூட்டல்
2.நெகட்டிவ் இல்லாமல் படத்தில் இருந்து படத்தைப் பிரதியாக்கம்செய்தல்
3.டிஜிட்டல் கமராவில் இருந்து எடுக்கப்படும் படங்களைப் பிரதியாக்கம் செய்தல்
4.அல்பத்திற்கான முகப்பு அட்டைப்படங்களைத் தயாரித்தல்
ஆகிய சேவைகளை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி விஸ்தரித்துள்ளது.
Vista Vision
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்,
52,பலாலி வீதி,யாழ்ப்பாணம்.
:021-2225187
FUJIFILM

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில்03.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.